362
1362

தொகுதி 12.] 1933௵ ஜூலை௴ [பகுதி 6.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

OFFICE OF THE REGIST
SEP 19
MADRA

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேராவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14 0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனாயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

உ

இரத்தினபுரி இரகசியம்

ஒன்பதாவது பாகம்

81-வது அத்தியாயம்

புதுக்கோட்டையில் மனோகரர்.

அன்பார்ந்த நேயர்காள்! எல்லாம் வல்ல எம்பெருமான் அருளால் நமது இரத்தினபுரி இரகசியத்தின், மூன்றாவது கதையின் ஒரு பகுதியை ஏழு, எட்டாவது பாகங்களில் ஒருவாறு விவரித்துவிட்டு இந்த ஒன்பதாவது பாகத்தில் மேற்கொண்டு எழுத உத்தேசித்துள்ளோம். நேயர்களனைவரும் இறுதிவரை நமது சந்தாதாரராக இருந்து முழுக்கதையையும் வாசித்து இன்புறுவீர்களென்று நம்புகிறோம். இதற்கு முன் ஒரு அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி செல்வநாதர் என்னும் மனோகரப்பிரபு தனது மக்களிடம் விடைபெற்றுக்கொண்டு புதுக்கோட்டையில் வசிக்கும் தன் காதலியைக் காணப் புறப்பட்டு வழியிலுள்ள ஊர்களையெல்லாம் கடந்து குறிப்பிட்ட ஊருக்குச் சமீபத்தில் சென்றதும் அவ்வூரின் வடமேற்குக் கோடியில் தனியானதொரு பங்களா மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தது. அம்மாளிகையின் பின்னால் ஒரு அழகிய தோட்டம். அதைச்சுற்றியும் மதிலும் அமைக்கப்பட்டிருந்தன. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அவ்வூர் சில மைல்கள் தூரத்துக்கு அப்பால் இருந்ததால் அவ்வ

ளவு தூரமும் நடந்து சென்ற அவர் காலை சுமார் பதினொரு மணிக்கு அம்மாளிகையின் அருகில் சென்றார். அவர் ஒரு புறம் சந்தோஷத்தையும் மற்றொருபுறம் வருத்தத்தையும் அடைந்தார். தன் காதலியாகிய ரங்கநாயகிச் சீமாட்டியைப் பார்த்து பதினாறு வருஷங்கள் கழிந்துவிட்டிருந்தன. இவ்வளவு காலத்துக்குப் பின்னர் அவளைப் பார்ப்பதென்றால் அவருக்குச் சந்தோஷமும், இடையில் ஏற்பட்ட கஷ்டங்களுக்காகத் துக்கமும் ஏற்பட்டதில் ஆச்சர்ய மொன்றுமில்லை. அவ்வூரில் விசாரித்ததில் ரங்கநாயகிச் சீமாட்டி தனிமையிலேயே பரிசுத்தத்துடன் வாழ்வதாகவும், தான தர்மங்கள் செய்துகொண்டு பக்தியுடன் இருப்பதாகவும், அவளது நடவடிக்கைகளைப் பார்த்தால் ஏதோ மனச்சோர்வு அடைந்தவள்போலக் காணப்படுகிற தென்றும் தெரிவித்தார்கள். மனோகரர் அம்மாளிகையின் அருகில் சென்றதும் சுமார் ஐம்பது கஜத்துக் கப்பாலேயே நின்றுகொண்டு அதை உற்று நோக்கினார். அச்சீமாட்டியை அவர் கடைசி முறையாகப் பார்த்தபோது அவளுக்கு வயது முப்பது. இப்போது அவர் அவளைப் பார்த்துப் பதினாறு வருஷங்களாய் விட்டபடியால் அவளுக்கு இப்போது நாற்பத்தாறு வயதாகி இருக்கவேண்டும். ஆகவே அவளது தோற்றத்தில் அதிக மாறுதல் ஏற்பட்டிருக்குமல்லவா? வயதுமட்டும் காரணமா? அவளுக்குப் பல கவலைகளும் தொல்லைகளும் அதிகரித்திருந்ததால் கட்டாயம் அவள் தோற்றத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கும்.

இவ்வாறு மனோகாம்பிரபு நினைத்தபோது ரங்கநாயகியின் உருவம் அவரது மனக்கண்முன் தோன்றியது. தான் கடைசி முறையாகப் பார்த்த உருவமே தெரிந்தபடியால் அச்சீமாட்டி மிக்க அழகுடனும் நல்ல பருவத்துடனும் காணப்பட்டாள். அப்போது அவளுடைய அங்கங்களெல்

லாம் கண்டோர் மனதைக் கவரும் தன்மையனவாக இருந் தன. அவர் பலமுறை முத்தமிட்ட அவளது உதடுகள் சிவப்பாகப் பவழம்போல் இருந்தன. அவர்கள் இருவரும் பரஸ்பரம் காதலித்து ஒருவரோடொருவர் இன்பம் நுகர்ந்த காலம் அவரது ஞாபகத்துக்கு வந்ததால் அப்போது அவள் இருந்த தோற்றமே அவர் மனக்கண்முன் தென்பட்டது. இப்போது நேரில் பார்த்தால் அந்த இளமை அப்படியே இருக்குமா? அதிக மாறுதல் ஏற்பட்டுவிட்டிருக்க மல்லவா? அதை நினைக்கும்போதே அவரது கண்களினின்றும் நீர் ஆறாகப் பெருகியது. ஒரு குழந்தையைப்போல் அழுதார். அவர் மட்டும் மாறுதல் அடைந்திருக்கவில்லையா? அவர் இன்னும் இரண்டடி எடுத்து வைத்ததும் ஒரு மாது அம்மா ளிகையினின்றும் இறங்கித் தோட்டத்தின் வழியே நடந்து வந்தார். அவள் இடப்பக்கத்திலேனும் வலப்பக்கத்திலே னும் திரும்பிப் பாராமலும் தலை குனிந்தவண்ணமும் நடந் தாள். அவள் கறுப்பு உடையை அணிந்துகொண்டிருந்த துடன் முகமூடியையும் அணிந்திருந்தாள். மனேகார் இருந்த இடத்திலிருந்து அவளது முகத்தைப் பார்க்க முடியவில்லை யென்றாலும் அப்பெண் உருவம் தனது காதலியாகவே இருக்கவேண்டுமென்று நிச்சயித்தார். அவர் அங்கேயே ரஸ் தாவின் ஓரமாக நின்று, தான் நின்றுகொண்டிருக்கும் வழியே அவள் வந்தால் அவளைக் கண்டு மகிழலாமென எண் ணினார். அவளும் சதாகாலமும் ஏதோ சிந்தனையில் மூழ்கி யிருப்பவளைப்போல் அடிமேலடிவைத்து மெதுவாக நடந்து செல்லுகையில் முகமூடியையும் நன்றாகப் போர்த்துக்கொண்ட படியால் அவள் சிறிது அருகில் வந்தபோதும் அவளுடைய முகத்தைக் காணமுடியாமற் போனதால் அவர் மனம் சிறிது அவஸ்தைப்பட்டது. தான் விரும்பி வந்த மாதோ அல் லவோ என்னும் சந்தேகமும் அவருக்கு ஏற்படலாயிற்று.

அம்மாதும் வேறு வழியே போய்விட்டாள். மனேகரம்பிரபு அம்மாளிகைக்குச் சென்று அதன் தோட்டத்தின் வாயிற் படியைக் கடந்து உள்ளே சென்ருர். அம்மாளிகையில் புகுந்து ஒரு புதிய ஆள் வந்தால் எப்படி விசாரிப்பாரோ அப் படி விசாரிக்கலாமா அல்லது அம்மாதைப் பின் தொடர்ந்து சென்று அவளைக் கண்டு பேசிவிடலாமா என்று நினைத்தார். எதவும் தோன்ருமல் யோசனையுடன் நின்ற அச்சம யத்தில் வயது சென்ற ஒரு சேவகன் அவ்வழியே வரவும் அவனைக் கண்டு மனேகரம் பிரபு, 'ஐயா, நான் ரங்க நாயகிச் சீமாட்டியைப் பார்க்கவேண்டும். அதோ அங்கு செல் லும் மாது அவர்தானே,' என்று கேட்டார். அதற்கு அச் சேவகன், 'ஆம். ஐயா, அம்மாதுதான். ஆனல் அம்மாது யாரையும் தானகக் கண்டுபேசுவதில்லை. இம்மாளிகையில் அச் சீமாட்டியின் தோழியும், பால்ய சிநேகிதையுமான ஒரு கிழவி இருக்கிருள். அவளது பெயர் பங்கஜம். அவளைக் கண்டு தான் எவரும் பேசவேண்டும்' என்ருன்.

பங்கஜம் என்னும் பெயரைக் கேட்டதும் மனேகரம் பிரபு, 'ஆ' என்ருர். அதுதான் ரங்கநாயகிச் சீமாட்டியின் இரகசியத்தை யறிந்த தோழியின் பெயர் என்பதை அவர் அறிவார். அவர் அச் சேவகனிடம் 'அப்படியா! ஆயினும் நான் சில பிரத்யேக விஷயங்களைப் பேசவேண்டி யிருக் கிறதே' என்றதும் அவன், 'அப்படியானல் நீங்களே அச் சீமாட்டியிடம் அறிமுகம் செய்துகொண்டு விடலாம். அவ சியமானல் அவரே உம்மை பங்கஜத்தினிடம் அனுப்புவார்' என்று சொன்னன். அச் சேவகன் மரியாதையுடனும் பரி வுடனும் பேசியதால் மனேகரம் பிரபுவுக்குத் தைரியமுண்டா யிற்று. அவளையே பார்த்துப் பேசிவிடலாமெனப் புறப்பட் டார். ஆனல் சிறிதுதூரம் சென்றதும், அவருக்கு ஒருவித

எண்ணம் தோன்றியது. அதாவது சீமாட்டி தன்னை அறிந்து கொண்டு விட்டால் விசித்திரமான காட்சி ஏற்பட்டுவிடு மல்லவா? ஆதற்காக அச் சீமாட்டி வருந்தினுல் என்ன செய்வது? இவ்வாறு தோன்றியதால் அவர் உடனே திரும்பி அதே சேவகனிடம், 'எல்லா விஷயங்களையும் யோசித்துப் பார்த்ததில் பங்கஜம் தோழியை முதலில் பார்ப்பதே நல்லதென்று தோன்றுகிறது' என்ருர். ஆகவே, அவ்வேலைக்காரனும் அவரைப் பங்கஜத்தினிடம் அழைத்துச் சென்ருன். அவள் கிழவியேயாயினும் ஒரு நிமிஷத்தையும் வீணில்போக்கச் சம்மதமில்லாதவள்போல் ஊசிவேலை செய்துகொண்டு ஒரு அறையில் உட்கார்ந்திருந்தாள். மனோகரம் பிரபுவும் எதிரில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாரென்ருலும் அவளுடன் ஒன்றும் பேசவில்லை. காரணமென்ன? அவள் அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் யாரென்று ஞாபகத்துக்குக்கொண்டுவர அவள் முயற்சிப்பதேபோல் காணப்பட்டது. உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த அவள் திடீரென்று தன் தேகம் முழுதும் நடுங்க மிக ஆர்வத்துடனும், துக்கத்துடனும், 'என் பிரபுவே, நான் தங்களை அறிந்துகொண்டுவிட்டேன். தாங்கள் இன்னுரென்று எனக்குத் தெரிந்துவிட்டது. தாங்கள் இங்கு என்ன வேலையாக வந்தீர்கள்' என்று கேட்டாள்.

அதற்கு அவர், 'இதையும் கேட்க வேண்டுமா? நீயே யூகித்துக் கொள்ளலாகாதா' என்று வினயமாகக் கேட்டார். அதற்கு அவள் உடனே, 'பிரபுவே! தங்கள் மனைவியின் சங்கதி என்ன? அவள் இன்னமும் உயிருடன் இருக்கிருளோ அல்லது இறந்துவிட்டாளா!' என்று கேட்டதும் மனோகரர் திடுக்கிட்டுப் போய் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென நினைத்து, 'ஐயோ, கடவுளே! எனக்காவது மனைவியாவது,

நான் விவாகம் செய்து கொள்ளவில்லையே' என்று கூறினர். அதைக் கேட்ட பங்கஜம் தன் ஆசனத்தினின்றும் எழுந்து கொண்டே சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தவளாய், 'பிரபுவே, இவ்விடத்தில் நீங்கள் பேசுவதெல்லாம் உண்மையாகவே இருக்குமென்று நான் நம்புகிறேன்' என்றதும் அவர் 'ஆம், நான் பேசுவதெல்லாம் மெய்யே, எனக்குப் பொய் பேசவோ, அல்லது பிறரை ஏமாற்றவோ தெரியாது. எனக்குக் கலியாணமே ஆகவில்லை. என் மனக் கண்ணினின்றும் உன் எஜமானியின் உருவமானது அகன்றதேயில்லை' என்ருர். இச் செய்தியைக் கேட்டதும் அவள், 'ஆ, இந்த உண்மை முன்னமே தெரிந்திருந்தால் என் எஜமானி வீணுகப் பல கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்க வேண்டியதில்லையே' என்று சொல்லிக்கொண்டே மீண்டும் தனது ஆசனத்தில் அமர்ந்து கண்ணீர் சொரிந்தாள். இதையெல்லாம் பார்த்த செல்வநாதர் என்னும் மனோகாம்பிரபு அதிக ஆத்திரத்துடன் 'எங்கள் விஷயத்தில் எவ்வளவு கொடுமைகள் இழைக்கப்பட்டிருக்கின்றன என்பதை முழுதும் தெரிந்துகொள்ள இன்னமும் முடியவில்லை. அதிருக்கட்டும். உன் எஜமானி தன்னுடைய குமாரன் சபாபதி இன்னும் உயிரோடு இருக்கிருன் என்பதை அறிவாளா ?'' என்று கேட்டார். இதைக் கேட்டதும் பங்கஜம் அதிக ஆச்சர்யமடைந்து பிரபுவையே உற்றுப் பார்த்த வண்ணம் ஒருகால் அவர் சித்த சுவாதீன மற்றவராக இருக்கிருரோ என்று நினைத்தாள். அவள் பேசாமல் மௌனியாக இருப்பதைக் கண்ட அவர், 'மாதே; நான் சொல்வதில் ஆச்சர்ய மொன்றுமில்லை. நீ உன் எஜமானியிடம் அதிக நம்பிக்கையுள்ள தோழியாகவே இருக்கிருய் என்றுதான் நம்புகிறேன். அவளுடைய குமாரன் சபாபதி உயிருடன் இருப்பது மட்டுமல்ல. அவனுடைய சொத்துக்களையும் பட்டத்தையும் அக்கிரமமாய்ப் பறித்துக்கொண்ட

OFFICE ... SEP 1933

அவனுடைய சிற்றப்பன் அவையனைத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டதுடன் தான் செய்த குற்றங்களையும் ஒப்புக் கொண்டு விட்டான்' என்று விவரமாகக் கூறினார்.

பங்கஜம் அதிக ஆனந்தத்துடன், 'இச் செய்தியைக் கேட்டு நான் கடவுளுக்கு வணக்கம் செலுத்துகிறேன். என்னுடைய எஜமானி இன்னமும் சந்தோஷமும் இன்பமும் அனுபவிக்கக்கூடிய காலம் இருக்கிறதென்றே நினைக்க வேண்டியிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே இரு கைகளையும் கூப்பி ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் பிரார்த்தனை செய்தாள். சொற்பநேரம் ஒன்றும் பேசாமல் இருந்த மனோகரம் பிரபு, 'மாதே, நாம் பல விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும். நான் இங்கு வந்திருக்கிறேன் என்பதையும், சபாபதி உயிருடன் இருக்கிறான் என்பதையும் உன் எஜமானியிடம் சொல்வதற்கு முன்னர் நாமே பலவிஷயங்களைப் பற்றிக் கலந்து பேசவேண்டியிருக்கிறது. நம்முடைய குழந்தைகளான நவநீதமும், மோகன சுந்தரமும் சௌக்கியமாய் இருக்கிறார்களென்பதையும், அவர்கள் இரத்தினபுரிக் கருகிலுள்ள எனது புது மாளிகையிலேயே இருக்கிறார்களென்பதையும் உன்னிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மறுபடியும் நீ என்னை இப்படி உற்றுப் பார்ப்பதன் நோக்கமென்ன?' என்றார். அதற்கு அவள், 'ஐயா, இப்போது நீங்கள் இன்னும் சில விவரங்களைச் சொல்ல வேண்டும். அந்தப்பாவி தர்மலிங்கம் பிரபு என் எஜமானியின் விஷயத்தில் எவ்வளவோ அயோக்கியத்தனமாக நடந்து கொண்டதுடன் நான்கு வருஷங்களுக்கு முன் மோகன சுந்தரம் இறந்து போனதாகவும், நவநீதம் விவாகம் செய்துகொண்டு விட்டபடியால் நீங்கள் வைத்து விட்டுப்போன அவளுடைய தொகையை அவள் எடுத்துக்கொண்டு விட்டதாகவும் தெரிவித்தானே. அதுமெய்

தானு? இந்த விவரங்களை யெல்லாம் தெரியப் படுத்துங்கள்' என்ருள். அதற்கு அவர், 'எல்லாம் பொய், அயோக்கியத்தனம். அந்த தர்மலிங்கமும், நான் வைத்து விட்டுப்போன பணத்துக்கு டிரஸ்டிகளாக ஏற்படுத்தியவர்களும் அயோக்கியத்தனமாக நடந்துகொண்டு விட்டார்கள். அவர்கள் செய்த குற்றத்துக்குத் தண்டனையை அவர்கள் அனுபவிக்காமல் போவதா? அவர்களுக்குப் பலவிதமான தொல்லைகளையும் விளைவிப்பேன். ஆனல் பற்பல விஷயங்களையும் கவனிக்கும்போது நான் என்னுடைய ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு ஒருவாறு நிதானமாக இருக்க வேண்டியது தான்' என்று சொல்லிக் கொண்டே அதே அறையில் மேலும் கீழுமாக நடந்தவர் திடீரென்று நின்று பங்கஜமென்னும் அக்கிழவியின் கையைப் பிடித்துக்கொண்டு, 'ஓ மாதே. நீ உனது எஜமானியிடம் அதிக உண்மையுடன் நடந்துகொண்டு வருவதற்காக நான் உனக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்! என்ருர். அப்போது அக்கிழவி தன் கண்களில் நீர்ததும்ப, 'ஓ, என்னுடைய பிரபுவே! இப்போது நீங்கள் தெரிவித்த செய்திகளால் என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள். இப்போது நான் எவ்வளவு சந்தோஷப்படுகிறேன் தெரியுமா? என் எஜமானியும் இனிமேல் இவ்வளவு சந்தோஷத்தையும் அனுபவிக்கப் போகிருள். நான் இச்செய்திகளை விரைவில் என் எஜமானியிடம் சொல்ல வேண்டியிருப்பதால் நாம் பரஸ்பரம் கலந்து பேசவேண்டிய இதர விஷயங்களையும் பேசி முடிப்போம்' என்ருள்.

அப்போது செல்வநாதர் என்னும் மனேகரம் பிரபு, 'என்னுடைய குழந்தைகளான நவநீதம், மோகன சுந்தரம் ஆகியவர்களைப் பற்றி இனியும் நான் சொல்ல வேண்டியதில்லை அவர்கள் என்னுடைய பாதுகாப்பில் இருக்கிருர்கள். அவர்

களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும், சௌகரியங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நான் பதினாறு வருஷங்களுக்கு முன் எழுதிவைத்த சொத்தைமட்டும் அப்படுபாவிகளான பஞ்சநதம் பிரபுவும், பச்சையப்பரும் சுயப்பிரயோசனம் செய்துகொண்டு விட்டார்கள்,' என்று சொல்லி முடிக்கு முன்னர் அக்கிழவி ஆச்சர்யத்துடன்,' பச்சையப்பரா? எனது எஜமானியின் சொந்த சகோதரனா? அப்படியானால் நவநீதம் கணவனைவிட்டு வேறு கள்ளக் காதலுடன் ஓடிவிட்டதாகவும், அவள் விபசார வாழ்க்கையை நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்களே, அது பொய்தானா?' 'என்று கேட்டாள். அதற்கு மனோகரம்பிரபு தெளிந்த தொனியில்,' எல்லாம் பொய். எனது குமாரி நவநீதத்தைப் போல் அவ்வளவு கற்புடைய மாது இவ்வுலகிலேயே வேறு எவரும் இரார் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். அவளுடைய சங்கதியை யெல்லாம் விஸ்தாரமாகச் சொல்லிக் கொண்டிருக்க இப்போது அவகாசமில்லை; ஆயினும் சுருக்கமாகக் கூறுகிறேன். அவள் துளசிங்கம் பிரபுவை மணந்து கொண்டாளென்று விவாகச் சடங்கு நடத்தியது வெறும் மோசடியாகும். பச்சையப்பர் பலவந்தமாக அக்கலியாணத்தை நடத்தி வைத்தானேயொழிய அது சட்டப்படி செல்லுபடியாகாது. மோகனசுந்தரத்தை பஞ்சநதம்பிரபு முதலில் அரச தர்பாரில் ஒருசேவகனாக அமர்த்தினான். பிறகு அவன் அங்கு யாரோ இருமாதர்களை அடையாளங் கண்டுபிடித்து விடுவான் போலக் காணப்பட்டமையால் அவனை அப்பிரபு ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில் ஒரு பிரதம சேவகனாக அமர்த்தினான். அது கிடக்கட்டும். நான் போய்விட்ட பின்னர் இந்தப் பதினாறு வருஷங்களாக நடந்த விவரத்தைச் சொல்ல வேண்டியது உன்கடமை' எனக்கேட்டார்.

அப்போது அவள் எல்லா விவரங்களையும் கூறினாள். அவள், 'பிரபுவே, என் எஜமானியின் இரகசியம் அவளுடைய மைத்துனனான தர்மலிங்கம் பிரபுவுக்குத் தெரிந்துவிட்ட படியால் அவள் அவனுடைய இஷ்டப்படி நடக்கவேண்டியதாயிற்று. முதலில் அவன் என் எஜமானியையும் அவளுடைய குமாரனான சபாபதியையும் பிரித்துவிட்டான். பிறகு கொஞ்ச காலைக்கெல்லாம் அவன் இறந்துவிட்டதாகத் தெரிவித்துவிட்டான்.' என்று கூறியபோது மனோகரம் பிரபு, 'இல்லவே இல்லை. சபாபதி சாகவில்லை. தர்மலிங்கம் வேறு யாரோ ஒரு ஏழைப் பையனுடைய பிரேதத்தைக் கொண்டுவந்து சபாபதியினுடைய பிரேதமென்று சொல்லி அடக்கம் செய்துவிட்டுச் சபாபதியை சமுத்திரவிலாச மாளிகை என்னும் கட்டடத்தில் அடைத்துவிட்டான். சபாபதி அங்கே தான் இந்தப் பதினாறு வருஷங்களும் சிறைப்பட்டுக் கிடந்தான்' என்றார். இச்செய்தியைக் கேட்டுப் பங்கஜம் பீதியடைந்தாள். பிறகு அவள் மேலும் கூற ஆரம்பித்து, 'பிறகு ரங்கநாயகிச் சீமாட்டியின் கணவனான சுகானந்தம்பிரபு அன்னிய நாட்டிலிருந்து திரும்பி வந்தார். அவர் உஷ்ணப் பிரதேசத்தில் அதிலும் ராணுவத்தில் சேர்ந்து உழைத்ததால் அவரது தேகம் மெலிந்து பலஹீனமடைந்திருந்தது. மேலும் தனது குமாரன் இறந்துவிட்டானென்று கேள்விப்பட்டதும் அவர் இன்னும் துக்கத்தில் மூழ்கலானார். ஆகவே சொற்ப தினங்களுக்கெல்லாம் அவர் மனமுடைந்து இறந்துபோனார். அவர் அன்னிய நாட்டிலிருந்து திரும்பி வந்தபோது எனது சீமாட்டியின் மனம் புண்ணாகி உருகியது. தான் செய்த குற்றத்தை அவர் அறிந்துவிட்டால் என்ன செய்வது என்னும் அச்சம் ஒருபுறம்; தான் தவறு இழைத்திருந்தும் அதை மறைத்து வைத்து மிக்க யோக்கியமானவள்போல் கணவனிடம் நடந்து கொள்ள வேண்டுமே என்னும் கவலை ஒருபுறம். இவ்வாறாக

அவள் பலவித கஷ்டங்களிலும் சிக்கியபடியால் கணவன் இறந்தது ஒருவித சுபசகுனமாகவே கருதப்பட்டது. அவர் இறந்ததும் தர்மலிங்கம் அந்த ஆஸ்தியையும் பட்டத்தையும் தானே அபகரித்துக்கொண்டு எனது எஜமானிக்கு வருஷம் மூவாயிரம் பவுன் உபகாரச் சம்பளம் அளிப்பதென ஏற்பாடு செய்தான்' என்றாள்.

அப்போது மனோகரம் பிரபு, 'சுகானந்தம் பிரபு இறந்து போன ஒரு வருஷத்துக்கெல்லாம் நான் உன் எஜமானிக்கு ஒரு கடிதம் எழுதினேனே. அதைப்பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா' என்று கேட்க அவள், 'நான் அதைத்தான் இப்போது சொல்ல வருகிறேன். தர்மலிங்கம் ஆஸ்திபாஸ்திகளையும் பட்டத்தையும் பறித்துக் கொண்டபின், நீங்கள் என் எஜமானியை மறு விவாகம் செய்துகொண்டு இரத்தினபுரிக்குத் திரும்பிவர ஏதேனும் வழி செய்வீர்கள் எனக்கண்ட அவன் உங்களை இங்கு வாராதவாறு தடுக்கச் சூழ்ச்சி செய்யலானான். உங்கள் கடிதம் கிடைத்ததும் அவனே முதலில் படித்துப் பார்த்தான். அதை என் எஜமானியிடம் சொல்லி அவள் அதற்கெல்லாம் இணங்கக்கூடாதென்றும், தன் இஷ்டத்துக்கு விரோதமாக நடந்தால் அவளது இரகசியத்தைப் பகிரங்கப்படுத்தி அவளை மானபங்கப் படுத்திவிடுவதாகவும் பயமுறுத்தினான். பிறகு அவனே ஏதோ ஒருவிதமாகப் பதில் எழுதும்படி பலவந்தப்படுத்தினான். அதற்குப் பதில் நீங்கள் வரைந்தீர்களோ இல்லையோ தெரியவில்லை. அதன் பின்னர் எத்தகைய கடிதமும் என் எஜமானியிடம் கொடுக்கப்படவில்லை' என்றாள். அதற்கு அவர், 'நான் பிறகு கடிதம் எழுதவே இல்லை. அதிக தூரதேசம் போய்விட்டேன். செல்வநாதர் என்னும் பெயரை வைத்துக்கொண்டு உலகை வெறுத்துத் தனி வாழ்க்கையை நடத்தலானேன்' என்றார். பங்கஜம்

மறுபடியும் பேச ஆரம்பித்து, 'என் எஜமானியின் மைத்துனன் இனி தன்னை யாரும் கேட்பாரில்லையென நினைத்துத் தாராளமாக சொத்து சுதந்தரங்களை ஆள ஆரம்பித்துடன் என் எஜமானியையும் அடக்கிவிட்டான். அவளும் நாளுக்கு நாள் தேக சுகத்தைபடைந்து கவலைகளை மறந்து என்றைக் காயினும் நீங்கள் திரும்பிவந்து அவளைச் சுகமாக வைப்பீர்க ளென்னும் நம்பிக்கையுடன் காலங்கழித்து வருகையில் ஒரு நாள் தர்மலிங்கம் என் எஜமானியிடம் ஒரு கடிதத்தைக் காண்பித்து அது உங்களிடமிருந்து கிடைத்ததாகவும் அதில் உங்களுக்குக் கலியாண மாய் விட்டதாக எழுதப்பட்டிருப்ப தாகவும் அறிவித்தார். இதைக்கேட்டதும் என் எஜமானி திடுக் கிட்டுப்போய், உலக வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்து அதனுல் காயலாவாக விழுந்தாள். அப்போது அவள் தன் இருகுழந்தைகளையும் பார்க்க விரும்பியதால் தர்மலிங்கமும் அதற்கு அனுமதியளித்தான். பிறகு என் எஜமானி நகரத் துக்கப்பால் அதிக தூரம்சென்று தனிவாழ்க்கை நடத்த விரும்பியதை அறிந்த அவளது சகோதரனும் மைத்துனனும் சேர்ந்து இந்த இடத்துக்கு அனுப்பினர்கள். மனமோகனர், தேசிதாசர் என்னும் வக்கீல்கள் மூலமாக எஜமானிக்கு உப காரச் சம்பளம் அனுப்பப்படுகிறது' என்று விவரமாகக் கூறினுள்.

அப்போது பிரபு, 'சீமாட்டியின் இருப்பிடத்தை யாருக் கும் சொல்லலாகாதென்றும் அந்த வக்கீல்களுக்குத் தர்மலிங் கம் உத்தரவிட்டிருப்பான் அல்லவா? 'என்றுர் அதற்குப் பங்கஜம்,' என், என்னுடைய எஜமானியும் இங்குவந்ததும் இனி தன்னுடைய நண்பர்கள் எவருக்குமே கடிதம் எழுதுவ தில்லை யென்றுர், உலகத்தில் வேறு எந்தப் பாகத்துடனும் எத்தகைய சம்பந்தமும் வைத்துக் கொள்வதில்லை யென்றும்

ஆனால் தன் குழந்தைகளைப்பற்றி மட்டும் அப்போதைக் கப் போது தன் மைத்துனன், தம்பி முதலியோர் மூலம் தெரிந்து கொள்வதென்றும் முடிவு செய்தாள். அவ்வாறே சில வருஷங் கள் கழிந்தபின் நவநீதத்துக்குத் தக்க பிராயம் வந்தபடியால் நரசிங்கம்பிரபுவுக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுத்த தாகக் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்திருந்த வேளையில் திடீரென்று அவள் தன் கணவனைவிட்டு ஓடிப்போய் விபசார வாழ்க்கை நடத்துவதாக அறிந்து மிக்க கவலைப்படலானாள். இதற்குள் மோகன சுந்தரமும் இறந்துபோனதாகச் செய்தி கிடைத்தது' என்று சொல்லி முடிக்கு முன்னர் மனோகரம் பிரபு, 'எல்லாம் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் செய்யப்பட்டிருக்கின்றன. ரங்கநாயகிச் சீமாட்டி தன் மக்க ளைப் பற்றி ஒன்றும் விசாரிக்கக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு யோசனை செய்யப்பட்டிருக்கிறது. உன் எஜமானி யின் வாழ்க்கை எவ்வாறு கழிந்தது என்பதைச் சிறிது சொல் பார்க்கலாம்' என்று கேட்டார். அதற்கு அவள், 'இந்த இரண்டு விஷயங்களைத் தவிர அவள் மனநிம்மதியுடனேயே இருந்திருக்கிறாள். அவள் மனநிம்மதியுடன் இருந்ததனால் தான் தேக அசௌக்யம் ஒன்றும் ஏற்படாமல் திடசரீரத்து டன் இருக்கிறாள். எனினும் இப்போது நீங்கள் கொண்டுவந் தது போன்ற சந்தோஷச் செய்தி கொண்டுவராமல் இருந்தால் அவள் இன்னும் சொற்ப தினங்களில் மன முடைந்து அக் கவலைக்கே இரையாகி விட்டிருப்பாள். இங்குள்ள ஜனங்கள் அவளைப்பற்றி ஒன்றும் அறியார்களாதலால் அவள் ஏதோ சித்தஸ்வாதீனமற்றுக் கிடப்பதாகக் கருதுகின்றனர். இனி மேல் என் எஜமானி எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. நான் இச்சங்கதிகளை யெல்லாம் அவளிடம் சொல்லி அவள் மகிழும்படியும், நீங்களும் அவளும் உடனே சந்திக்கும்படி யும் செய்யலாமென்று நினைக்கிறேன்' என்றாள்.

இன்னும் சொற்ப நேரத்துக்குள் தன் மனமார்ந்த காத லியைக் கண்டு களிக்கப் போகிறேனென்னும் எண்ணத்தால் மனோகரம் பிரபுவின் மனம் அதிக சந்தோஷத்தையடைந்தது. ஆகவே அவர், 'அப்படியே செய், உடனே போய் உன் எஜ மானியிடம் எல்லாச் செய்திகளையும் தெரிவித்துவிடு' என்றதும் அவள், 'பிரபுவே, நான் அவளிடம் சபாபதியைப்பற்றி என்ன சொல்வது ? தாயார் என்னும் முறையில் அவள் அவனைப் பற்றியும் அறிய மிக ஆவலாக இருப்பாள் அல்லவா ? என்று கேட்க, அப்பிரபு, 'மாதே, நீ கூறுவது சரிதான். சபாபதி தக்க யௌவனம் வாய்ந்தவனாகவும், மிக்க அழகானவனாக வும் இருக்கிறான் என்றும், அவனைப்பற்றி அவள் பெருமை யடையலாமென்றும் கூறு. மேலும் அவளுடைய குமாரி நவ நீதமும், பற்றொரு குமாரனான போகன சுந்தரமும் அழகான வர்களாகவும், இனிய, குணநிசயங்களை யுடையவர்களாகவும் இருக்கின்றனரென்றும், இதனால் அவள் சந்தோஷப்படலா மென்றும் தெரிவி. நான் அவளைக் காண அனுமதி பெற்று வருவாய் என்று மிகஆவலுடன் காத்திருப்பேன்' என்றார் உண்மையான தோழியாகவும், எல்லா விஷயங்களையும் உணர்ந்தவளாயுமிருந்த பங்கஜமும் என்றுமில்லாத வகை யில் சந்தோஷத்துடன் தன் எஜமானியை நாடிச் சென்றாள்.

82-வது அத்தியாயம்

—:(o):—

காதலர்களின் சந்திப்பு

ரங்கநாயகிச் சீமாட்டிக்கு அப்போது வயது நாற்பத் தாறு என்றாலும் அவள் பல துறைகளிலும் சுத்தமான வாழ்க்கையையே நடத்தி வந்ததால் அவள் தேகக்கட்டு குலை

யாமல் இளமையுடனேயே காணப்பட்டாள். நாற்பது வய துடையவள்போல் தோன்றிற்று. அவளது அங்கங்களெல் லாம் தளர்ந்து போகாமல் மிடுக்குடனேயே இருந்தன. பற் கள் வெண்மையாகவும் வரிசையாகவும் முத்து மாலைபோல் காணப்பட்டது. அவளது உதடுகள் பவழம்போல் சிவந் திருந்தன. கம்பீரமாகவும் பெருந்தன்மையுடனும் காணப் பட்டாள். மிக்க அழகிய, கண்டோர் மனதைக் கவரும் தன்மைவாய்ந்த மாதாகவே அவள் இருந்தாள் என்று சொல் வது மிகையாகாது. அப்படிப்பட்ட ரங்கநாயகிச் சீமாட்டி யைக் காணத்தான் மனோகரம் பிரபு ஆவலுடன் காத்திருக் கிறார். அம்மாது அவ்வளவு அழகானவளாயும், கம்பீரத் தோற்றமுடையவளாயும் இல்லாமல், கவலையாலும் மற்றக் காரணங்களாலும் அவள் அங்கமெல்லாம் குழிவிழுந்து கண் கள் பாதாளத்தில் போய் அவள் பார்வைக்கு அருவருக்கக் கூடிய தன்மையில் இருந்திருந்தாலும் மனோகரம்பிரபு அவளை அன்புடனும் ஆர்வத்தடனும் அணைத்துக் கொண்டிருப்பா ரென்பது நிச்சயம். ஏன்? அவர் அவளை அவளுடைய அழ குக்காகவோ, மற்ற காரியங்களுக்காகவோ காதலிக்கவில்லை. உண்மைக் காதல் அந்த இரு ஆன்மாக்களுக்கிடையே நிலவி வந்தது. பங்கஜம் உள்ளே போய் எஜமானியிடம் எல்லா வற்றையும் சொல்லிவிட்டு அப்பிரபுவை அனுப்ப மீண்டும் வெளியே வருவதற்கு அரைமணிநேரமே ஆயிற்றென்றாலும் அதுவே அவருக்குப் பெரிய யுகம்போலக் காணப்பட்டது. ஒவ்வொரு நிமிஷமும் அவர், பங்கஜம் வெளியே வருவாளா என்று மிக ஆவலுடன் அவள் நுழைந்த அறையின் வாயிற் படியைப் பார்த்துக்கொண்டிருந்தார். சொற்ப நேரத்துக் கெல்லாம் பங்கஜம் அவ்வறையினின்றும் வெளியே வந்தாள் அவள் மனோகரம்பிரபுவைத் தன்னுடன் வரும்படி அழைத்து விட்டு வழி காட்டினளென்றாலும் சிறிது தூரம் சென்றதும்

இனி நான் வரக்கூடாது. நீங்கள் அந்த உள்ளறையில் தனி யாகப் போகலாம்' என்று கூறினுள்.

மனேகரம்பிரபு அந்த உள்ளறையில் நுழைந்ததும்தான் மீண்டும் ஒரு யெளவனனைப் போல் உணர்ந்தார். இடையில் கழிந்த சுமார் இருபது வருஷங்கள் தனது வாழ்க்கையில் மறைந்து விட்டதாகவே அவர் கருதினர். அவர் அறையில் நுழைந்ததும் அதன் கதவு உள்புறம் சாத்தப்பட்டது. ஒரு சந்தோஷக் குரலின் ஒலி கேட்டது. மனேகரம் பிரபுவும் எதிர்பாராத வகையில் ரங்கநாயகிச் சீமாட்டி ஒரே பாய்ச்ச லாகப் பாய்ந்து அப்பிரபுவின் ஆலிங்கனத்தில் அமர்ந்தாள். இருவரும் பரஸ்பரம் அணைத்துக் கொண்டார்கள். இடையில் துக்கத்துடன் கழித்த காலத்தை யெல்லாம் அவர்கள் மறந் துவிட்டார்கள். அவர்கள் அறுபதுவயது ஆடவனும், நாற் பத்தாறு வயது மாதாகவும் இருந்தும் அவர்கள் மிக்க இளை ஞர்களைப் போல் உணர்ச்சி பெற்றூர்கள். உண்மையான ஆனந்தம் என்பது வயோதிகர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரே தன்மை வாய்ந்ததாகவே இருக்கும். ஆகவே வயோதி கர்களான அவர்களும் இளைஞர்களைப் போலவே கட்டித் தழு விக் கொண்டு காதல் லீலைகளில் ஈடுபட்டனர்.

சில நிமிஷங்களுக்குப் பின்னர் அவர்கள் இருவரும் ஒரு சோபாவில் உட்கார்ந்துகொண்டு ஒருவர்மீது ஒருவர் கை போட்டுக் கொண்டனர். பரஸ்பரம் ஒருவரை யொருவர் உற் றுப்பார்த்துக் கொண்டே இருந்தனர். பங்கஜம் கூறியபடியே ரங்கநாயகிச் சீமாட்டியின் தோற்றத்தில் அதிக மாறுதல் ஏற் படவில்லை யென்பதை மனேகரர் தெரிந்துகொண்டார். எனி னும் தன் மனமார்ந்த காதலி பலவித கஷ்டங்களுக்கும் உள் ளானுள் என்பதை நினைத்தபோது அவரது முகத்தில் சிறிது

துக்கக்குறி காணப்பட்டது. அதைக்கண்ட ரங்கநாயகி, 'அன்பார்ந்த மனோகரரே! உங்கள் சந்தோஷத்தில் இன்னும் ஏதோ மேகம் மூடிக்கொண்டிருக்கிறது போல் தெரிகிறதே, என்ன விசேஷம்' என்று கேட்க அவர், 'கண்மணியே, நான் அதிக மாறுதல் அடைந்திருப்பதையும், வயோதிகத்தனத்தை அடைந்துவிட்டதையும் நீ காணவில்லையா? நான் கிழவனாகி விட நீ மாத்திரம் இளமையுடனேயே காணப்படுகிறாயே' என்றார். அதற்கு அவள், 'அன்பரே! அப்படிப் பேசாதீர். நான் இப்போது தங்களைத் தங்கள் உருவத்தைக்கொண்டு கவனிக்கவில்லை. பழைய விசுவாசத்துடனேயே உங்களைக் காண்கிறேன். நான் உங்களைக் காணும்போது இதே அழகுடன் இருக்கவேண்டுமென்று சதாகாலமும் நினைத்து வந்தபடியால் இப்படியே இருக்கிறேன். நான் இளமையுடன் இருப்பதாகத் தாங்கள் சொன்னால் அதுவே எனக்கொருவித சந்தோஷத்தைக் கொடுக்கிறது' என்று சொல்லிக்கொண்டே அவரது கழுத்தில் தன் கரத்தைப் போட்டு அவரை அன்புடனும் ஆர்வத்துடனும் தழுவிக்கொண்டாள். ரங்கநாயகி அவ்வாறு தழுவியதால் பரம சந்தோஷத்தை யடைந்த மனோகரர் புன்சிரிப்பு சிரித்து ஆனந்தத்துடன் அவளது கன்னத்தில் அன்பார்ந்த இரண்டொரு முத்தங்களைத் தந்தார். தாங்கள் இருவரும் வயது முதிர்ந்தவர்கள் என்பதையும் அவர்கள் மறந்து இளைஞர்களான காதலர்களைப்போல் பரஸ்பரம் முத்தமிட்டுக்கொண்டு தங்கள் கவலைகளையெல்லாம் ஒழித்தனர்.

அப்போது ரங்கநாயகி, 'காதல! இப்போது நடந்தவையெல்லாம் ஒரு கனவுபோல எனக்குத் தோன்றுகிறது. இந்த உலகத்தில் எனக்கு இப்படிப்பட்ட சந்தோஷமான வேளை ஒன்று வரும் என்று நான் நினைக்கவேயில்லை. ஆயினும் சிற்

சிலசமயங்களில் எனக்கும் தெரியாமல் என் உள்ளத்தில் ஒருவித எண்ணம் தோன்றுவதுண்டு. அதாவது என் வாழ்க்கையில் ஏதேனும் ஒருவித மாறுதல் ஏற்பட்டுச் சந்தோஷம் தோன்றினும் தோன்றலாம் என்பதே. என்றாலும் பெரும்பாலும் நான் வாழ்க்கையில் உற்சாகமும் நம்பிக்கையும் இழந்தவளாய்த் துக்கத்துடனேயே காலத்தைக் கழிப்பதுண்டு. ஆயினும் நான் கவலைகொள்ளாமல் எல்லாவற்றையும் மறந்து நிம்மதியாக இருப்பதுதான் வழக்கம். எப்படியோ இன்று என் நற்காலவசமாக என் வாழ்விலேலே ஒரு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. இதனால் நான் சந்தோஷத்தையும் பேரானந்தத்தையும் உற்சாகத்தையும் அடைந்துள்ளேன். இகத்திலும் பரத்திலும் இப்போது எனக்குப் புதுநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இனி நான் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. இதுவரை நடந்ததெல்லாம் கனவாக மாறிவிட்டது' என்று சந்தோஷத்துடன் கூறினாள். அவ்வாறு கூறியபோதும் அவள் தன்னையும் அடக்க முடியாமல் சங்கோசத்தையும் விட்டு அப்பிரபுவுக்குப் பல முத்தங்களைக் கொடுத்தாள். அவரும் அன்றையதினம் அவரது வாழ்க்கையிலேயே ஒரு முக்கிய தினமெனக் கருதினார். இவ்வாறாக அவர்கள் பேச வேண்டிய பல முக்கிய விஷயங்களையும் விட்டுத் தங்கள் காதல் உணர்ச்சியைப் பற்றியே சுமார் ஒருமணி நேரம்வரை பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சபாபதி, நவநீதம், மோகனசுந்தரம் ஆகியவர்களைப் பற்றியும் பேசிக்கொண்டார்கள். இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது தாங்கள் இன்னும் எத்தகைய முடிவுக்கும் வரவில்லையே, இனி எவ்வாறு நடந்துகொள்வதென்பது பற்றிப் பேசிக்கொள்ளவில்லையே என்று நினைத்து சீமாட்டி திடீரென்று, 'எனதன்புள்ள பிரபுவே, அதெல்லாம் இருக்கட்டும். நாம் இனி எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்பதுபற்றிப் பேசி ஒருவித முடிவுக்கு

வாவேண்டாமா? நான் எனது அன்புக் களஞ்சியங்களான மக்களை இருகாங்களாலும் கட்டியணைத்துக்கொள்ள மிக ஆவலுடன் இருக்கிறேன் என்பதை நீங்கள் உணர்ந்துகொண்டிருக்கலாமென்றே நினைக்கிறேன். எனது அன்புச் சுப் பாத்திரர்களான அவர்கள் எங்கே இருக்கிறார்களென்பதைக் காண இவ்விடத்திலிருந்து நான் பறந்து போகலாமா என்றும் ஆசைப்படுகிறேன். ஆகவே நீங்கள் இங்கு வரும்போது ஏதேனும் திடமான யோசனையுடன்தான் வந்தீர்களா இல்லையா என்பதை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.' என்று மிக ஆவலுடன் கேட்டாள்.

அதற்கு அப்பிரபு, 'எனதன்புள்ள காதலியே! இனி நாம் என்ன செய்வதென்று என்னைக்கேட்கிருயே. எல்லாம் உன்னையே பொறுத்திருக்கிறதென்பதை நீ அறியவில்லையா? ஒரே ஒரு கேள்விக்கு நீ சொல்லப்போகும் விடையையே பொறுத்திருக்கிறது இனி நாம் என்ன செய்யவேண்டு மென்பது?' என்று சொல்லி முடிக்கு முன்னர் அவள், 'காதலரே! உங்களுடைய எண்ணத்தை நான் தெரிந்து கொண்டுவிட்டேன். நான் உங்களுக்கு மனைவியாக வேண்டுமென்பது உங்கள் கருத்து. நானும் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமா என்றுதானே காத்திருக்கிறேன். அந்த நிலைமையை அதாவது தங்களுக்கு மனைவியாவதைப் பரம சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வேன். நீங்கள் எக்காலத்திலாயினும் திரும்பி வந்து என்னை மறுவிவாகம் செய்துகொள்வீர்களா என்றுதானே நானும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்' என்றாள். அதைக் கேட்டுப் பரமானந்தமடைந்த மனோகரர் அவளது கரத்தைப் பிடித்து அதற்கு முத்தமிட்டு, 'கண்ணே! இத்தகைய உறுதி மொழிதான் எனக்கு மிக்க சந்தோஷத்தைத் தருவதாகும். இப்போது நாம் இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டி

யிருக்கிறது. அதாவது நமது குழந்தைகளான நவநீதம், மோகனசுந்தரம் ஆகியவர்களுடன் சபாபதியும் இருக்கிறான். அவனுக்கு உன் சம்பந்தமான ரகசியமொன்றும் தெரியாது. அதை அவன் அறியாதபடியே வைப்பதா? அல்லது தெரிந்து கொள்ளும்படி செய்து அம்மூவரும் சகோதர முறையிலுள்ளவர்கள் என்பதை அறியும்படி செய்வதா? என்பதை நீதான் தெரிவிக்க வேண்டும். மற்ற இருவருக்கும் நம்முடைய சங்கதிகளெல்லாம் நன்றாய்த் தெரிந்துவிட்டது,' என்றார். அதற்கு அவள், 'ஓ, இந்தவிஷயத்தில் என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிடுகிறேன். சபாபதிக்கு எல்லா விஷயங்களும் தெரிந்துவிட வேண்டியதுதான். அவனுடைய தாயாராகிய என் குற்றத்துக்காக அவன் என்னை மன்னிப்பானென்றே நினைக்கிறேன். நான் உங்களுடைய மனைவியாகப் போவதால் நம்முடைய குழந்தைகளையும் மக்களாகவே ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். இதில் உலகம் என்ன நினைக்கும் என்பதுபற்றி நான் கவலைப்படப் போவதில்லை. இதற்கு நீங்களும் இணங்கவேண்டு மென்பதுதான் எனது பிரார்த்தனை. இதனால் ஏற்படும் மான அவமானங்களெல்லாம் பெண்ணாகிய என்னைச் சேருமேயொழிய ஆணாகிய தங்களுக்கு எத்தகைய பழியும் ஏற்படாது. பல நாட்களாகவே விட்டுப் பிரிந்திருந்த என் மக்களை உடனே சேர்த்துக்கொள்வேனேயொழிய உலகப் பழிக்குப் பயந்து நான் அவர்களை இன்னமும் விட்டுப் பிரிய முடியாது. இதையெல்லாம் உலகம் அறிந்ததும் என்னைப் பழிக்குமாதலால் அப்படிப்பட்ட பழிக்கு ஆளான என்னைத் தாங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்வதில் ஏதேனும் ஆட்சேபமுண்டோ?' என்று வினயமாகக் கேட்டாள்.

அவளுடைய உண்மை உணர்ச்சியையும், மக்களிடத்துள்ள அன்பையும் கண்டு பாராட்டி அப்பிரபு, 'மாதே! அப்

படியே ஆகட்டும். உலகநிந்தனையை எதிர்க்கும் சக்தி உனக்கு இருக்குமாயின் நான் எதற்கும் தயாராக இருக்கிறேன். நான் மீண்டும் உன்னை விவாகம் செய்துகொள்ளச் சந்தர்ப்ப மேற்படும் என்று காத்திருந்தேன் அல்லவா? மேலும் சபாபதியும் உனது செயலுக்காக வருத்தப்படமாட்டானென் றும், நவநீதத்தையும் மோகனசுந்தரத்தையும் சகோதரர்களாக ஏற்க அவன் சிறிதும் பின் வாங்கமாட்டானென்பதையும் நான் நன்கு அறிவேன். ஆதலால் உன் இஷ்டப்படியே செய்வோம்' என்றார். உலகத்தார் பழிக்காக எவ்வளவு பயப்படவேண்டி யிருக்கிறது பார்த்தீர்களா? 'அதோ போகி றானே அவன் எப்படிப்பட்டவன் தெரியுமா' என்று பிறர் இழிவாகச் சொல்லும்படியான நிலைமையில் எவரும் இருப் பது தகாது. ஆயினும் உலக மக்களில் பெரும்பான்மை யோர் இல்லாததையும் கட்டிவிட்டு வீண் புகார் செய்து அப வாதம் கூறும் சந்தர்ப்பங்களும் சில உண்டு. அத்தகைய சம யங்களில் அதைப் புறக்கணித்தே அஞ்சாமல் நடந்துகொள்ள வேண்டும். உண்மையாக நடந்துகொள்ள விரும்புகிறவர் கள் உலகப்பழி எத்தகையதாயினும் அதற்கு அஞ்சமாட் டார்கள். மனோகரர் அவ்வாறு சொன்னதைக் கேட்ட ரங்க நாயகிச் சீமாட்டி, 'இனி நாம் நமது குடும்ப விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி நமது மக்களைச் சௌக்கியமாக வைத்து இன்புறும்படி செய்யவேண்டுமேயொழிய உலகம் என்ன கூறுகிறது என்பதுபற்றிக் கவனித்துக் கொண்டிருப் பதில் பிரயோசனமில்லை. நீங்கள் என்னை விவாகம் செய்து கொண்டதும் சபாபதிக்கும் தந்தையாக இருந்து அவனுக் குத் துணை புரிந்து அவனுடைய முன்னேற்றத்தையும் நாடு வீர்களென்றே நம்புகிறேன்' என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அவர், 'அதிலென்ன சந்தேகம்? அவனையும் நான் என் மகனைப்போலவே கருதுவேன் என்பது நிச்சயம். அவ

னுக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்துகொடுப்பேன். மேலும் சபாபதி கள்ளங்கபடமற்றவன். குழந்தைப் பருவம் முதலே சிறையில் அடைபட்டு இப்போதுதான் வெளியே வந்தபடியால் அவனுக்கு உலகஅனுபவம் எதுவும் ஏற்படாமல் பிறந்தபோது எப்படி களங்கமற்ற மனத்தின னாக இருந்தானோ அப்படியே இருக்கிறான். பரிசுத்த நியாய மும், இயற்கைக் குணமுமே அவனிடம் அதிகம் காணப்படு கிறது. ஆதலால் அவனுடைய தாயாகிய நீ என்னைக் காதலித்த போது அக்கிரமமாக மற்றொருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டதனால்தான் இவ்வாறு நிகழ்ந்தது என்பதை அவன் அறிந்ததும் உன்னிடம் அனுதாபங்கொள்வான் என் பதில் சிறிதும் சந்தேகமில்லை!' என்றார்.

அப்போது அவர்கள் இருந்த அந்த இடத்தைவிட்டு உடனே புறப்பட்டுச் சென்று தன் மக்களைக் காணவேண்டு மென்னும் ஆர்வமுடையவளாய், 'அப்படியானால் நாம் இன் னும் எந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்கவேண்டும். இங்கி ருந்து நாம் எப்போது புறப்படவேண்டும் நான் ஒரு நிமிஷத் தில் தயார்செய்து கொள்கிறேன். உடனே புறப்படவேண்டு மென்று நீங்கள் சொன்னால்தான் எனக்குத் திருப்தியாக இருக்கும். ஆனால், தாங்கள் நேற்று முழுதும் பிரயாணம் செய்ததால் மிக்க களைப்பு அடைந்திருப்பீர்களே. அதை நான் கவனிக்கவேயில்லை. என்ன சுயநலம் பார்த்தீர்களா! என் ஆவலைத் தீர்த்துக்கொள்வதில் கவனமுடையவளாக இருந்தேனேயொழிய தங்கள் களைப்பை ஆற்றுவதில் கவ னம் செலுத்தவேயில்லை. தாங்கள் இங்குவந்து என்னிடம் இச்சந்தோஷச் செய்திகளைச் சொல்லி என்னை ஆனந்தக் கட லில் மூழ்குவித்ததால் நான் வேறு மனுஷியாக மாறிவிட் டேன். எப்படிப்பட்ட களைப்பையும் பொறுத்துக் கொள்ளக்

கூடிய சக்தி எனக்கு ஏற்பட்டுவிட்டது 'என்று கூறலும் அவர், 'அநாவசியமாக நாம் காலதாமதம் செய்பவேண்டிய தில்லை. சபாபதி, நவநீதம், மோகனசுந்தரம் ஆகிய மூவரும் உன் மடியில் இருப்பதைக்காண நானும் உன்னைப்போலவே மிக ஆவலுடையவனுக இருக்கிறேன். நான் பார்ப்பதற்கு வயோதிகனைப்போல் இருக்கிறேனே தவிர உற்சாகத்திலோ ஊக்கத்திலோ உழைப்பிலோ நான் யாருக்கும் குறைந்தவனல்ல. ஆகவே நாம் இன்றுமாலை புறப்பட்டு விடுவோம்! என்றூர். அவளும் அதற்குச் சம்மதித்து அவளுடன் தன் உண்மைத் தோழியான பங்கஜத்தையும் மற்ளெரு உண்மைச் சேவகனையும் அழைத்துச் செல்வதென முடிவுசெய்தாள். எப்போதும் மெதுவாகவும், அடிமேல் அடிவைத்தும் நடக்கும் சுபாவமுடைய அவள் அப்போது மிக ஆவலுடன் ஆளை அழைக்கும்மணி இருக்கும் இடத்துக்குப் பறந்து சென்று அதை அழுக்கினுள். உடனே சேவகனும் ஓடிவந்தான். அவனும் பங்கஜத்தின்மூலம் அன்று வந்த கனவான் யார் என்று தெரிந்து கொண்டுவிட்ட படியால் மிக்க சந்தோஷத்துடன் அக்காதலர்கள் முன்வந்து நின்றுன்.

நாம் மேலேகூறிய விவரம் நடந்த மறுநாள் மாலைசுமார் ஆறுமணிக்கு இரத்தினபுரியின் ஒரு பாரிசத்திலுள்ள செல்வநாதரின் புதுமாளிகையின் அருகில் ஒருவண்டி வெகுவேகமாகவந்து கொண்டிருந்தது. அம்மாளிகையில் இருந்த சபாபதி, நவநீதம், மோகனசுந்தரம் ஆகியோர், செல்வநாதர் என்னும் மனேகரம் பிரபுவின்வரவை அல்லது அவருடைய செய்தியை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த படியால் வண்டியின் சத்தத்தைக் கேட்டதும் அவர்கள் மிக ஆவலுடன் வெளியேவந்து பார்த்தார்கள். இதற்குள் வண்டியில் வந்துகொண்டிருந்த மனேகரம்பிரபு, வண்டியிலிருந்து

குறித்து அம்மாளிகையில் நுழைந்து அம்மூவரையும் ஒரு ஹாலில் அழைத்துச்சென்று, 'சபாபதியும், மற்றவர்களும் உங்கள் அன்புக்கு மிக்க பாத்திரமான ஒருவரைக்காணப் போகிறீர்கள் ! என்றார். அப்போது மோகனசுந்தரம் 'ஓ, எங்கள் தாயாரா !' என்று ஆவலுடன் கூச்சலிட்டான். அப்போது அப்பிரபு, 'ஆம்; உங்கள் தாயார்தான். சபாபதி! அவள் உனக்கும் தாயாரே; நீ நவநீதத்தையும் மோகனசுந்தரத்தையும் அணைத்துக்கொள். ஏனென்றால் அவர்கள் உன் சகோதரர்களே 'என்றார். உடனே சபாபதியும் இது எப்படி இருக்க முடியும் என்பதையும் யோசியாமல் தான் சில காலமாகச் சொந்த சகோதரனையும் சகோதரியையும் நேசிப்பதுபோல் நேசித்துவந்த மோகனசுந்தரமும் நவநீதமும் உண்மையிலேயே சகோதரனும் சகோதரியுமாகி விட்டதைக் கேட்டுச் சந்தோஷமடைந்தான். அப்போது அப்பிரபு நவநீதத்தினிடம், 'நான்போய் உங்கள் தாயாரை உள்ளே அழைத்து வருகிறேன். அவள் உங்கள் மூவரையும் தன் மார்பில்வைத்து அணைத்துக்கொள்ள மிக்க ஆவலுடன் இருக்கிறாள். நான் அவளை உள்ளே அழைத்துக்கொண்டு வருவதற்குள் நீ சபாபதியிடம் நான் யாரென்பதை அதாவது மனோகரம்பிரபு என்பதைத் தெரிவித்துவிடு, 'என்று சொல்லிவிட்டு வெளியே போனார். இரண்டொரு நிமிஷங்களுக்குள் அவர் ரங்கநாயகிச் சீமாட்டியுடன் மீண்டும் அதே அறையில் புகுந்தார். எல்லாரும் பரஸ்பரம் களிப்பு மிகுதியால் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தவர்களாய் ஒருவரை யொருவர் அணைத்துக் கொண்டார்கள். ரங்கநாயகி தன் மக்கள் மூவரையும் கண்ணாரக் கண்டு தன் இருகரங்களாலும் தழுவிக்கொண்டு அன்பார்ந்த முத்தங் கொடுத்தாள். அவர்களும் அவளை அன்புடன் தழுவிக்கொண்டனர். அதிலும் மோகனசுந்தரம் அச்சீமாட்டியைக் குழந்தைப் பருவத்தில் ஒன்றிரண்டு முறைகளில் பார்த்திருப்ப

தால் எளிதில் அடையாளங் கண்டு பிடித்துத் தான் நீண்ட காலமாகப் பார்க்க ஆவல் கொண்டிருந்த அவள் எதிரிலேயே வந்துவிட்டாளே என்னும் சந்தோஷத்துடன் பன்முறை அவளைத் தழுவிக் கொண்டான். உண்மையிலேயே தாயும் மக்களும் அணைத்துக்கொண்ட காட்சி அனைவருக்கும் இன்பம் அளிக்கத்தக்கதேயாகும்.

83-வது அத்தியாயம்.

ஆபத்தான சூழ்ச்சி

இப்போது நாம் இரத்தினபுரியைச் சேர்ந்த நடுக்குப்பத்திலுள்ள கோபாலன் தம்பதிகளுடைய பாழடைந்த மாளிகையைக் கவனிப்போம். ஒருநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு மரகதம் தன்னுடைய வழக்கப்படி காட்டுமிராண்டி போன்ற உடையை அணிந்து அதிகதூரம் நடந்து அதனால் களைப்பும் அழுக்கும் அடைந்த நிலையில் அங்குவந்து சேர்ந்தாள். அவள் அக்கட்டடத்தில் நுழைந்ததும் அங்கிருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து தனக்கு ஏதேனும் அருந்தக் கொடுக்கும்படி கேட்டாள். கோபாலனும் அவளுக்கு ஒரு பாத்திரத்தில் சிறிது மதுபானம் அளித்துக்கொண்டே, 'உனக்கு உடம்பு ஏதேனும் சரியாக இல்லையா, அல்லது அதிகம் களைப்பு அடைந்திருக்கிறாயா? இதைக் குடித்துப்பார். உடனே உனக்கு உற்சாகமும் சுறுசுறுப்பும் உண்டாகும்' என்றான். அவளும் அதை நன்றாகக் குடித்துவிட்டு அப்பாத்திரத்தைக் கோபாலனிடம் கொடுத்துக்கொண்டே, 'ஆம், நான் அதிகம் களைப்படைந்திருக்கிறேன். இன்று பல மைல்கள்

தூரம் நான் நடந்தேன். எப்படியாவது இன்று இரவு இங்கு வந்து சேரவேண்டும் என்று முடிவு செய்திருந்ததால் இப்படி வரவேண்டியதாயிற்று. இருக்கட்டும் இன்று என்ன தேதி என்றாள். அதற்கு அவன், 'இன்று ஆகஸ்ட் 10ந் தேதி என்றதும், அவள், 'அப்படியா: நான் ஜுலை 21-ல் அவனுக்கு வாக்களித்து ஒரு மாதத்தில் சந்திப்பதாகச் சொன்னேன். இன்னும் பதினொரு தினங்களே இருக்கின்றன. இந்த தினத்துக்குள் நான் கண்டுபிடித்து விடவேண்டும்' என்றாள். இதைக்கேட்டுவிட்ட கோபாலன், 'நீ யாரைச்சந்திக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டே மற்றவர்களிடம், 'அவளுக்கு மூளை குழம்பிவிட்டிருக்கிறது போலும்' என்றான்.

கோபாலன் அவ்வாறு கூறியதைக் கேட்டுவிட்ட மரகதம், 'அப்படியொன்றுமில்லை. நான் யாரைத் தேடுகிறேன் என்றல்லவா நீ கேட்டாய்; இங்கு அடிக்கடி வருகிறவர்கள் யார் என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டும். அதோ அந்த அறையில் அதிகப்பேர் இருக்கிறார்களோ என்று' கேட்டாள். அதற்கு அதற்கு அவன், 'ஆம், ஒருடஜன் பேர்வழிகள் இருக்கிறார்கள் அதில் முனியன்தான் இன்று அபூர்வமாக வந்திருக்கிறான்' என்றதும் அவள், 'எந்த முனியன். பிரேதங்களை இழுத்துக் கொண்டுவந்து ரசாயன சாஸ்திரிகளான டாக்டர்களுக்குக் கொடுப்பானே அவனா?' என்று கேட்கக் கோபாலன், 'ஆம், அவன்தான். ஆனால் அவன் இப்போது அந்த வேலையைச் செய்வதில்லை அவன் சேம்பாக்கத்தில் ஆடுமாடு தொட்டிகளை வைத்துக்கொண்டு உயர்தரமான மாமிசத்தை மிலிட்டெரி ஓட்டல்களுக்குச் சப்ளை செய்கிறான். அதில் அவனுக்கு நல்ல வரும்படி' என்றான். உடனே அவள் அறைக்குப் போகப் புறப்பட்டாள். கோபாலனும் அவள் என்ன செய்கிறாள் என்பதை அறிந்துகொள்

ளும்பொருட்டு அவளுடன் சென்ருன். அந்த அறையில் இருந்த காலிகள் கூட்டத்தில் முனியனும் ஜெயசிங்கும் இருந் தார்கள். ஜெயசிங் மரகதத்தைப் பார்த்ததும், 'மரகதம் வரு கிருளே, அவள் ஒரு மந்திரக்காரியைப்போலல்லவோ இருக் கிருள்' என்ருன். அதைக் கேட்டுவிட்ட அவள், 'ஆம், நான் மந்திரக்காரிதான். அப்படியிருந்தும் நான் தேடிக்கொண்டு வரும் ஒன்றை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. உங்க ளில் யாராவது அவ்வேலையைச் செய்தால் ஐம்பதுபவுன் சன் மானம் அளிப்பேன். இதோ இப்போதே ஐம்பது பவுன் நோட்டுகளை எடுத்து இக்கட்டடத்தின் சொந்தக்காரனுகிய கோபாலனிடம் கொடுத்துவிடுகிறேன். சில வருஷங்களுக்கு முன் இந்த நகரில் தெருக்கூத்து கம்பெனி ஒன்று இருந்தது. அது இப்போது இருக்கிற இடமே தெரியவில்லை. அந்தக் கம் பெனியின் மானேஜராக இருந்த கோவிந்தன் என்பவனும் இருக்கிருனு அல்லது இறந்துவிட்டானு என்பதும் தெரிய வில்லை. அவனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு நான் இந்த ஐம்பது பவுன் நோட்டையும் கொடுத்து விடுகிறேன்' என்ருள்.

இதைக் கேட்டதும் அங்கிருந்த ஜெயசிங் துள்ளிக் குதி த்து 'நான் எப்படியாவது அந்த கோவிந்தன் என்பவனைக் கண்டுபிடித்து விட்டு இந்த ஐம்பது பவுனையும் அடித்துக் கொண்டு போவேன் என்பது திண்ணம்' என்ருன். ஆனுல் அவன் இந்தத் தொகையைச் சிறிது அதிகப்படுத்தலாகாதா என்றும் கேட்டான். மரகதம் அதெல்லாம் முடியாதென்று சொன்னதுடன் இம்மாதம் 21வ க்குள்ளாகத் தேடிக் கண்டு பிடித்துவிட்டால் ஏதேனும் சிறு தொகையை அதிகமாகக் கொடுத்தாலும் கொடுக்க முன்வரலாம் என்று தெரிவித்தாள். பிறகு அங்கிருந்து போய் வேறு அறையில் கோபாலன் மனை வியுடன் பேச ஆரம்பித்தாள்.

அக்கட்டடத்தின் சொந்தக்காரனுன கோபாலன், மாரக தம் கொடுத்த ஐம்பதுபவுன் நோட்டுகளேயும் பத்திரப் படுத்தி வைத்துவிட்டு அவளுடைய அபிப்பிராயமென்ன? எதற்காக அவள் யாரையோ தேடிக்கொண்டிருக்கிருள் என்பதை அறியும்பொருட்டு, அவள் இருக்குமிடத்துக்குச் சென்ருன். அங்கு அவனும் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து, 'மாரகதம்! இதோ இந்த உயர்ந்த மதுபானத்தை அருந்து. நீ ஆரம்பித்திருக்கும் வேலேயில் உனக்கு வெற்றி கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்' என்ருன். அதற்கு அவள், 'என் காரியம் சித்தியாகுமென்றுதான் நான் நம்புகிறேன். அதிருக்கட்டும் நடுக்குப்பத்தில் என்ன விசேஷம்? ஏதேனும் புதிய சங்கதி உண்டா?' என்று கேட்டாள். அவன், 'இங்கு ஒன்றும் விசேஷமில்லே. இப்போது நீ எடுத்துக்கொண்டிருக்கிற வேலேயில் நான் ஏதேனும் உனக்கு உதவி செய்யக்கூடுமா? கோவிந்தன் என்னும் அம்மனிதனேப்பற்றி நீ ஏதேனும் அதிகம் அறிந்துகொண்டிருக்க வேண்டுமென்றே நான் நம்புகிறேன்!' என்ருன். அவள் அதைப்பற்றி அதிகம் பேச விரும்பாமல் அச்சம்பாஷணேயை வேறுவிதமாக மாற்றக் கருதி, 'நீ இப்பால் ராட்சஸ குப்பனேப் பார்த்தாயா?' என்று விசாரித்தாள். அதற்குக் கோபாலன் ஏதோ சிறிது தாமதத்துடன் பேசுவதுபோல் மெதுவாக, 'ஆம், பார்த்தேன்' என்ருன். 'அவன் சம்பந்தமாக ஏதேனும் வெளியாய் விட்டதோ?' என்று மாரகதம் கேட்க, அவன், 'இல்லே. எதுவும் வெளியாகவில்லே. அச்சங்கதி அப்படியே மறைந்துவிட்டது போலத் தெரிகிறது' என்று சொல்ல ஆரம்பித்தபோதே ராட்சஸ குப்பனும் தன்னுடைய வழக்கப்படியான ஆடையுடன் அங்கு வந்து சேர்ந்தான்.

அவன் மாரகதத்தைக் கண்டதும், 'ஓ, மாரகதமா! உன்னே நான் இங்கு சந்திப்பேனென்று நினேக்கவேயில்லே. சென்ற

வாரத்தில் நான் இரண்டுமூன்றுதடவை அதிக தூரத்திலுள்ள உன் குடிசைக்கு வந்தேன். ஆனால் அது பூட்டப்பட்டிருந்தது.' என்றதும் அவள், 'என்ன ஏதேனும் வேலையாகத் தேடிக்கொண்டு வந்தாயோ?' என்று கேட்டாள். அதற்கு அவனும், 'ஆம்; ஒரு வேலையாகத்தான் வந்தேன். நாம் அந்தத் தனியறைக்குச் செல்வோம், வா. சில முக்கிய விஷயங்களைக் கலந்து பேசவேண்டியதாக இருக்கிறது.' என்று கூறிவிட்டுக் கோபாலனைப் பார்த்து, 'எங்கள் இருவருக்கும் சிறிது மதுபானம் கொண்டுவா' என்று சொன்னான். பிறகு மாடி மீதுள்ள இரகசிய அறைக்கு ராட்சஸ குப்பன் மரகதத்தை அழைத்துச் சென்றான். அங்கு சென்றதும், 'மரகதம், இங்கேயே உட்காரு. நாம் இருவரும் சில விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியதாக இருக்கிறது. கோபாலன் மதுபானத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போய்விடட்டும். அவன் வந்து போனபிறகு இங்கு நம்மைத் தவிர வேறு யாரும் இருக்கமாட்டார்கள்?' என்றான். மரகதம் ஒன்றும் பேசவில்லையென்றாலும் குப்பன் இனி என்ன சொல்லப் போகிறான் என்பதைக் கேட்க ஆவலுடன் இருப்பதுபோலக் காணப்பட்டாள். அவள் அந்த அறையைச் சுற்றிலும் பார்த்துக்கொண்டே, 'கோபாலன் இந்த வீட்டை ஏதோ ரிபேர் செய்கிறான்போலத் தோன்றுகிறது. அதோ அந்தக் கதவை உட்புறமாக அழுத்தப்பட்டிருக்கிறதே, ஏன்?' என்றாள். அதற்குக் குப்பன், 'ஓ, அந்தக் கதவா? அந்த வழி எங்கே போகிற தென்பது உனக்குத் தெரியுமா?' என்று கேட்டான்.

உடனே மரகதம், 'அது கோபாலனுடைய படுக்கையறைக்குச் செல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இன்னொரு கதவும் இருக்கிறதே. அது எதற்குவழியோ தெரியவில்லை' என்றாள். அப்போது ராட்சஸகுப்பன் அந்த விவரங்

களையெல்லாம் நான் சொல்கிறேன் என்று கூறிவிட்டு, ஏதோ சொல்ல முயன்றபோது கோபாலனும் மதுபானத்தை எடுத்துக்கொண்டு அங்கே வந்துசேர்ந்தான். அவன் அதை அங்கிருந்த மேஜையின்மீது வைத்துவிட்டு இரண்டொரு நிமிஷத்துக்கெல்லாம் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே போய்விட்டான். அப்போது மரகதம் ராட்சஸ குப்பனைப்பார்த்து, 'இனிமேல் நீ உன் விவகாரத்தைச் சொல்ல ஆரம்பிப்பாய் என்று நம்புகிறேன். வீண்காலப் போக்குசெய்ய வேலையில்லை யாதலால் சீக்கிரமாகப் பேசிமுடி. என்னால் ஏதேனும் ஆகவேண்டியிருந்தால் நான் அதைச்செய்வேன், 'என்றாள். அதற்கு அவன், 'அப்படியானால் உனக்குப் பலஜோலிகள் இருப்பதுபோலத் தெரிகிறதே; என்றான். அவளும், 'நான் எப்போதாவது வேலையில்லாமல் சோம்பிக் கிடந்ததுண்டா? நீயும் ஏதோ பலவேலைகளில் ஈடுபட்டிருப்பதாகவே தோன்றுகிறது. நான் இதற்குமுன் உன்னைப் பார்த்தபோது நீ ஏதோ தொழிலில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கையை நடத்தப்போவதாகக் கூறினையே அதுஎன்ன ஆயிற்று' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஆம்; எனக்கு ஞாபகமிருக்கிறது. ஏதேனும் தொழில்செய்ய வேண்டுமென்று தான் நினைத்தேன். ஆயினும் எனக்கு மூலதனம் கொடுப்பதாகச் சொன்ன சிலர் ஏமாற்றிவிட்டார்கள்! என்றான். மரகதம், 'நீ என்னதொழில் செய்யப்போகிறாய். ஏதேனும் யோசித்திருக்கிறாயா ' என்றுகேட்க, ராட்சஸகுப்பன், 'நல்ல லாபம் கிடைக்கக்கூடிய ஏதேனும் ஒருதொழில் செய்யவேண்டியது தான். ஓட்டல் முதலியவைகளை வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுவதைவிட என்னிடமுள்ள பணத்தையே வட்டிக்குக் கொடுத்துவிட்டு சொஸ்தமாக இருக்கலாமென்று நினைக்கிறேன். நீ என்னுடன் பலவிஷயங்களையும் கலந்து ஆலோசித்திருப்பது போலவே நானும் ஒரு விஷயத்தை உன்னுடன்

கலந்தாலோ சிக்க விரும்புகிறேன். அதற்காகவே நான் உன் குடிசைக்கு இரண்டு மூன்று தடவை வந்தேன்' என்றான்.

அதற்கு மாகதம், 'இப்போதுதான் என்னைச் சந்தித்து விட்டாயே. நான் உன் எதிரிலேயே இருப்பதால் நீ உன் விஷயத்தை என்னிடம் தாராளமாகச் சொல்லலாம் நான் உனக்காக என்ன செய்யவேண்டும் அதனால் எனக்கு என்ன கிடைக்கும் என்பனவற்றை யெல்லாம் விவரமாகக்கூறு' என்றாள். ராட்சஸகுப்பன், 'நீ சில நிமிஷங்களே எனக்காக வேலை செய்வதால் உனக்கு ஐம்பதுபவுன்கள் கிடைக்கும் என்றதும் அவள், 'அப்படியானால் உடனே விஷயத்தைச் சொல். கால தாமதம் செய்யவேண்டாம். எனக்கு அவகாசமில்லை யென்றாலும் தக்க வரும்படி கிடைக்குமாயின் அதற்கான வேலையை ஒதுக்கிவைப்பேன்' என்றாள். குப்பன் தன் ஆசனத்தை மாகதத்தினருகில் இழுத்துக்கொண்டு, 'மாதே, என்னை அமர்த்திக் கொண்டிருக்கும் சீமாட்டியை யாரோ இருகனவான்கள் சதாகாலமும் தொந்தரை விளைவித்துக் கொண்டு வருகிறார்களாம். அவர்கள் இருவரின் பெயரையும் சொல்ல முடியாது. அது உனக்கு அவசியமும் இல்லை. அந்த இருவரையும் தொலைத்து விடவேண்டுமென்று அச்சீமாட்டி விரும்புகிறாள். ஆனால் அவர்களுடைய பிரேதம் எங்கேனும் அகப்பட்டுவிட்டால் அதனால் பெரிய கிளர்ச்சி ஏற்படுமாதலால் அப்பிரேதங்கள் அகப்படாதபடியே அவ்விருவரையும் பைசல் செய்ய விரும்பி அச்சீமாட்டி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறாள். அதனால் எனக்குச் சுமாராகக் கிடைக்கும். அதில் ஐம்பது பவுன்களை உனக்குக் கொடுப்பேன்' என்று விவரமாகக் கூறினான். அப்போது அவள், 'சரி. இன்னும் முழுசங்கதியையும் சொல் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறேன்' என்றாள். அப்போது குப்பன், 'நான் அவர்களிருவ

ரையும் சுலபமாகக் கொல்ல ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறேன். இந்த அறையில் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து தூக்கிலிட்டுக் கொல்லமாட்டேன். இதோ இந்தக்கதவைத் திறந்துகொண்டு சென்றால் மற்றொரு பள்ள அறையில் கொண்டு போய்விடுகிறது. அதில் ஒருபெரிய நாற்காலி போடப்பட்டிருக்கிறது. அதன் கீழ்இருக்கும் நிலப்பரப்பு தந்திரமாக அமைக்கப்பட்டிருப்பதால் நான் ஒருவேலை செய்தால் உடனே அது விலகிச் சென்று நாற்காலியுடன் அதிலுள்ள ஆளை பாதாளத்தில் விட்டுவிடும். அந்த நிலப்பரப்புக்குச் சரியாகக்கீழே ஒரு பெரிய கிணறு இருக்கிறது அதுமிக ஆழமாகவும், முட்கள் அடர்ந்ததாகவும். ஏறிவர வழியில்லாததாகவும் இருப்பதால் விழுந்தவர்கள் அதோடு சரிதான். பாதாள உலகத்தில் வசிக்க வேண்டியதைத் தவிர வேறுவழி அவர்களுக்கு இல்லை. நாற்காலியின் கீழுள்ள நிலப்பரப்பை விலகும்படிசெய்ய நான் அதிகதூரத்தில் ஒரு சூத்திரத்தை வைத்திருக்கிறேன். அதை நீதான் திருப்பவேண்டும். அவர்கள் வருவதற்கு அரைமணி நேரத்துக்கு முன்பே நீ சூத்திரம் இருக்குமிடத்துக்குச் சென்று இரகசியமாக உட்கார்ந்திருந்து நான் சமிக்ஞை செய்யும்போது அதைத் திருப்பி விடவேண்டும்' என்றான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மரகதம் திகிலும் வெறுப்பும் அடைந்தாளென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், 'சரி, பயப்படவேண்டாம். நான் இதில் உனக்குத்துணை செய்வேன். எனக்கு வேண்டியது பணம்தானே. இக்காரியத்தை எப்போது முடிக்கப்போகிறாய் என்பதை என்னிடம் முன்னாடியாகச் சொல்லிவை? என்றாள். அதற்கு அவன், 'நான் எனக்குத் துணையாக ஒரு ஆளை இதுவரை தேடிக் கொண்டிருந்தேன். நீதான் எல்லாவற்றிற்கும்

சம்மதித்துவிட்டாயே. இனிநான் காலதாமதம் செய்யவேண்டியதில்லை. எதற்கும் நீ நாளை மறுநாள் இங்கேவந்தால் நான் மற்ற விவரங்களை உன்னிடம் சொல்வேன். அல்லது நானே உன் குடிசைக்கு வரட்டுமா?' என்று கேட்டான். அதற்கு இவள், 'நான் வீட்டில் இருக்கமாட்டேன் ஆதலால் நீ அங்கு வருவதில்பயனில்லை. நானே இங்கு வருகிறேன் நீ என்னிடம் எல்லாவற்றையும் தெரிவி. நான் வருவதற்குள் நீ வந்துபோய் விடுவதாயின் கோபாலனிடம் நான் எப்போது வரவேண்டுமென்பதைச் சொல்லிவிட்டுப்போ. அதன்படியே நான் நடந்து கொள்கிறேன். இப்போது நாம் பேசவேண்டியது இவ்வளவுதானே, அப்படியானால் நான் போய்வரட்டுமா?' என்று கேட்டாள். குப்பனும், 'மரகதம்! போய்வா, இப்போது பேசவேண்டியது வேறு ஒன்றுமில்லை. ஆயினும் நீ அந்த ஹேமவதி சீமாட்டியைச் சமீபத்தில் எப்போதாவது பார்த்தாயா? நானும் ஜெயசிங்கும் அவள்வீட்டில் கொள்ளையடித்தபோது அவள் ஏவுகாரர்களை விட்டு எங்களைத் தேடாதபடி செய்துவிட்டாயே உன் செல்வாக்கே செல்வாக்கு அவ்வளவு பெரிய சீமாட்டியிடம் நீ எவ்வாறு "அப்படிப்பட்ட செல்வாக்கை அடைந்தாய்? என்று கேட்டான்.

அதற்கு அவள், 'அதையெல்லாம் நான் பின்னால் சாவகாசமாகச் சொல்லுகிறேன்' என்றாள். ராட்சஸ குப்பனும் அச்சமயத்தில் அவளுடன் மேற்கொண்டு ஒன்றும் பேச விரும்பாமல், 'சரி, அப்படியே செய். எல்லாவற்றையும் பின்னால் பேசிக்கொள்வோம். இப்போது நாம் பிரிவோம்' என்றான். பிறகு மரகதம் குப்பனுக்கும் மற்றவர்களுக்கும் வந்தனம் செலுத்திவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றாள்.

84-வது அத்தியாயம்

மோகனதாஸனும் ராஜலட்சுமியும்

முன் அத்தியாயத்தில் நாம் சொன்ன விவரம் நடந்த மறுநாள் மாலை சுமார் எட்டு மணிக்கு மோகன தாஸனும் அவனுடைய சகோதரியான ராஜலட்சுமியும் தங்கள் பங்களாவின் தோட்டத்தில் உட்கார்ந்து ஏதோ பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது நல்ல காற்று இல்லாமல் வேக்காடாக இருந்ததால் எதிரில் இருந்த அறையின் ஜன்னல் கதவு திறக்கப்பட்டிருக்கவே அவ்வறையில் ஒரு மேஜையின்மீது எரிந்துகொண்டிருந்த விளக்கின் வெளிச்சம் வெளியில் உட்கார்ந்திருந்த சித்திரக் காரனுன மோகனதாஸ் முகத்திலும், பிரபல நாடகக்கணிகை யான ராஜலட்சுமியின் முகத்திலும் விழுந்து பிரகாசத்தைக் கொடுத்தது. அதிலும் ராஜலட்சுமியின் அழகைப் பற்றியும் இனிய குணுதிசயங்களைப் பற்றியும் இதற்குமுன் பலமுறை விளக்கியிருக்கிறேம். அழகில் அவள் இணையற்றவளென்றே கூறவேண்டும். தக்க யௌவனத்தையும் அடைந்திருந்ததால் கம்பீரத் தோற்றம் எப்படிப்பட்ட ரிஷிசிரேஷ்டர்களின் மனதையும் கவரத்தக்கதாக இருந்ததென்பதில் சந்தேகமில்லை. அப்படியிருந்தும்அவள் தேகத்தின்மீது ஆடவனுடையகையும் படாமல் பரிசுத்தமானவளாகவும். புத்தம் புதிதான கனிந்த பழம்போலும் இருந்தாள். அவள் நாடகத்துறையில் இருந் தாளென்ருலும் பரிசுத்தத்திலோ, கற்பிலோ சிறிதும் குறை யாதவளாகஇருந்ததனல் தான் அவ்வளவு ரம்யமாகத் தோன் றக் காரணமாயிற்று.

இப்படிப்பட்ட சகோதரியும், அவளுடைய சகோதானை மோகனதாஸும் சந்தோஷமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சந்தோஷமடைவதில் ஆச்சர்யமொன்றுமில்லை. மோகனதாஸ்; தான் காதலித்த ஷண்பகவல்லியை யடைவது நிச்சயமென்றும். அதற்கான முயற்சிகளையெல்லாம் செல்வநாதர் செய்வார் என்றும் நிச்சயமாக நம்பினன். ஆகவே சந்தோஷம் அதிகமாயிற்று. தன் சகோதானுடைய ஆவல் பூர்த்தி யாவதைக்கண்டு ராஜலட்சுமியும் சந்தோஷப்பட்டாள். ஆயினும் அன்பு என்பது இன்னமாதிரியாக இருக்குமென்பதும் அவளுக்குத் தெரியாது. அவள் குழந்தைப்பருவத்தில் தன் பெற்றோர்களிடமும் பிறகு தன் சகோதானிடமும் அன்புடன் இருக்கிறளே யொழிய மற்றொரு விதமான அன்பு என்பது அவளுக்குத்தெரியாது. மோகனதாஸ் ஷண்பகவல்லியிடம் கொண்டிருப்பது போன்ற அன்போ அல்லது காதலோ இன்னதென்பது அவளுக்குத் தெரியவே தெரியாது, இதுவரை எவரிடமும் அவளுக்கு அத்தகைய அன்போ, காதலோ ஏற்பட்டதேயில்லை, எனினும் காதல் என்பது மனிதனை நோக்கம் நிறைவேருதபோது வாட்டும் சக்தியையும் அது நிறைவேறும்போது சந்தோஷப்படுத்தும் சக்தியையும் உடையது என்பதை மட்டும் அவள் தன் சகோதானுடைய அனுபவத்திலிருந்தே தெரிந்துகொண்டு விட்டாள்.

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த சம்பாஷணையைச் சிறிது கவனிப்போம். மோகனதாஸ் தன் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே, 'இப்போது மணி ஒன்பது அடிக்கப் போகிறது. நமது அன்பார்ந்த பெரியார் செல்வநாதர் வேளை தவருமல் சொன்னது சொன்னபடி வந்து சேருவார். ஆதலால் இப்போது அவர் வருவார் என்றே நினைக்

கிறேன்' என்றான். அதற்கு அவள், 'சகோதர! அப்பெரி யார் இன்று நம்மைச் சந்திக்கும்போது தன்னைப் பற்றிய ஏதோ மர்மத்தை வெளியிடப் போவதாகச் சொன்னாரே. அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? என்று கேட்டாள். அப்போது மோகனதாஸ், 'என தன்புள்ள சகோதரியே! அதைப்பற்றி முடிவாக எதுவும் சொல்ல எனக்குத் தெரிய வில்லை. அது எப்படியிருந்தாலும் ஒன்றுமட்டும் நிச்சயம். அதாவது நீ இனி நாடகமேடைக்குச் செல்லவேண்டிய அவ சியம் ஏற்படாமல் போய்விடும். இதை எனக்கு அவர் முன் னரே இரண்டொரு தடவை குறிப்பாகச் சொல்லியிருக்கிறார். என்றதும் அவள், 'ஆஹா, அவர் நம்மிடம் அவ்வளவு அன் புடனும் அதிக தாராளத் தன்மையுடனும் நடந்துகொள்கி றாரே. நம்மிடம் அவருக்கு அவ்வளவு அபிலாஷை ஏற்பட்ட தற்குக் காரணம் யாதோ' என்று ஆச்சர்யத்துடன் கூறினாள். அதற்கு மோகனதாஸ், 'பிறர்க்கு நன்மை செய்வதிலேயே இன்பங்காணும் பெரியார்களில் அவரும் ஒருவர். மேலும் அவர் சிற்சில சமயங்களில் பேசிய தோரணையிலிருந்து அவர் பலவிதமான துன்பங்களையும் வாழ்க்கையில் அனுபவித்திருக் கிறார் என்றே தெரிகிறது. அவர் வாழ்க்கையில் வெறுப்பு கொள்ளாமல் தன் வாழ்க்கையையே பிறருடைய நன்மைக் கென அர்ப்பணம் செய்துவிட்டார் என்றே தெரிகிறது. இப் படிப்பட்ட மனிதர் அகப்படுவது மிகக்கஷ்டம். ஏதோ அதிர் ஷ்டவசத்தால் நாம் அவருடைய நட்பைப் பெற்றுவிட் டோம்' என்றான்.

ராஜலட்சுமி, 'ஆம்; இதுவும் நமது நல்லதிர்ஷ்டமே யாகும். அதிருக்கட்டும், நீ இன்று உன்காதலி ஷண்பகவல்லி யுடன் அதிகநேரம் பேசாமல் விரைவில் வந்துவிட்டாயே, என்ன விசேஷம்?' என்று கேட்டாள். அதற்கு மோகன

தாஸ், 'அவளும் இன்று செல்வநாதரை எதிர்பார்க்கிறாள். அவளிடமும் அவர் தன்னைப்பற்றிய ஏதோ மர்மத்தை வெளியிடுவதாக அறிவித்திருந்தாராம். ஆகவே நான் விரைவில் வந்துவிட்டேன். மேலும் உன்னைவிட்டு அதிகநேரம் பிரிந்திருக்கவும் நான் விரும்பவில்லை. அடடா, மற்றொரு சங்கதியை மறந்துவிட்டேனே அவர்எனக்கு எழுதிய கடிதத்தில் நாளையதினம் ஷண்பகவல்லியும் அவளுடைய உறவினளான மதனவல்லிச் சீமாட்டியும் இங்குவந்து உன்னைக்கண்டு உன்னிடம் அறிமுகம் செய்துகொள்வார் என்றும் தெரிவித்திருக்கிறார்' என்று சொன்னான். அவள், 'மிகச் சந்தோஷம்; அவர்கள் இருவரும் வந்தால் நான் அவர்களைக் கண்டு களிப்பதுடன் உன் அன்புக்கும் காதலுக்கும் பாத்திரமான ஷண்பகவல்லியை நானும் நேசிப்பேன். நீ நேசிக்கும் அவள் பிறராலும் நேசிக்கப்படத்தக்க அழகும் குணமும் உடையவளாக இருப்பாளென்றே நம்புகிறேன்' என்றதும் அவன் மிகஆவலுடன், 'அதில் சந்தேகமேஇல்லை. அவள் அனைவராலும் பாராட்டத்தக்க அழகும் குணாதிசயங்களும் உடையவளே. தற்கால நாகரிகத்தின் விபரீதப் போக்கில் அவள் அகப்பட்டவளல்ல' என்று கூறினான்.

அப்போது ராஜலட்சுமி, 'சகோதரா! அதிருக்கட்டும். அந்த மகா கொடிய சீமாட்டியான ஹேமவதி உன்னைப் பற்றித் தவறான ஒரு செய்தியைப் பரவச் செய்திருக்கிறாளே. அது விஷயமாக என்ன செய்யப்போகிறாய்?' என்று கேட்க, மோகனதாஸ், 'அந்த சங்கதியையும் நான் செல்வநாதரிடமே ஒப்படைத்திருக்கிறேன். இவ்விஷயத்திலும் அவர்தான் ஏதேனும் வழி கண்டு பிடிக்கவேண்டும். அவர் இங்கு வரும்போது ஏதாவது யோசனையைக் கொண்டு வருவாரென்றே நம்புகிறேன்,' என்றான். அதற்குச் சகோதரி, 'அப்பெரியார்

ஹேமவதி சீமாட்டியிடமும் எவ்வளவு செல்வாக்கு பெற்றிருக்கிறார் பார்த்தாயா? நாம் யூகிக்கிறபடி அவர் மனோகரம் பிரபுவுக்கு நெருங்கிய சிநேகிதராகத்தான் இருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது' என்றதும் அவன், 'ஆம்; அப்படித்தான் தோன்றுகிறது. இதோ வண்டிசத்தம் கேட்கிறது. அவர்தான் வந்துகொண்டிருக்கிறார்,' என்றான். உடனே சகோதரனும் சகோதரியும் தங்கள் ஆசனங்களைவிட்டெழுந்து தங்கள் வீட்டுக்கு வருபவரும் தாங்களால் மிக ஆவலுடன் எதிர்பார்க்கப் படுபவருமான செல்வநாதரை வரவேற்க வாயிற்படிக்குச் சென்றார்கள். மூவரும் பரஸ்பரம் மரியாதையாகக் கைகைக் குலுக்கிக் கொண்டனர். பிறகு அந்தப் பங்களாவின் முன் பகுதியிலேயே இருந்த ஹாலில் மூவரும் தனித் தனி ஆசனத்தில் உட்கார்ந்தார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல செல்வநாதரின் முகத்தைக் கண்டதே அவர் மிக்க சந்தோஷத்துடனும் உற்சாகமாகவும் இருப்பதாக அவர்கள் இருவரும் அறிந்து கொண்டு விட்டார்கள்.

அவர்கள் இருவரும் அதை அறிந்துகொண்டு விட்டார்கள் என்பதை, அவர்களுடைய முகக்குறியிலிருந்தும் அவர்கள் தன்னைக்கூர்ந்து கவனிக்கும் தன்மையிலிருந்தும் அறிந்து கொண்டுவிட்ட செல்வநாதர் சிரித்துக்கொண்டே, 'குழந்தைகாள்! என்ன பார்க்கிறீர்கள்? என் தோரணையில் சிறிது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மையே. நான் நம்பிக்கையை இழந்து சோர்வடைந்துவிட்ட சில இன்பங்களை இந்த வயதில் அனுபவித்தாக வேண்டுமென்று கடவுள் கட்டளை விதித்திருக்கிறார் போலத் தெரிகிறது. பல வருஷங்களாக நான் இழந்திருந்த அந்த இன்ப வாழ்க்கை இப்போது எனக்குக் கிடைத்திருக்கிறது,' என்றார். அப்போது அழ

6 SEP 1933

கிலும் குணத்திலும் சிறந்த நாரீமணியான ராஜலட்சுமீ, அப் பெரியாரிடம், 'ஐயா! தாங்கள் எப்போதும் பிறருக்கு நன்மை செய்வதிலேயே விருப்பமுடையவராக இருத்தலால் தங்களுக்கு இப்போது ஏதேனும் இன்ப வாழ்க்கை கிடைத்திருக்குமாயின் அதற்குத் தாங்கள் தகுதியுடையவரே என்று தான் எல்லாரும் ஏக மனதாகக் கூறுவர்கள், தாங்கள் எப்படிப்பட்ட இன்பத்தையும் பெறத் தகுதி வாய்ந்தவரே,' என்று இனிய குரலில் மொழிந்தாள். அப்போது அப் பெரியார், 'நான் அடைந்த இன்பம் காரணமாக, இங்கு வந்ததும் பிறருடைய இன்பத்துக் காதாரமான ஒரு காரியத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். மோகனதாஸ், உன் சம்பந்தமாக நான் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளை உன்னிடம் சொல்ல வேண்டாமா? நான் இன்று உன்னுடைய காதலியாகிய ஷண்பகவல்லியைச் சந்தித்து அவளுக்கு என்னைப் பற்றியும், மற்றும் பல விஷயங்கள் சம்பந்தமாகவும் இது வரை தெரியாதிருந்த பலவற்றை விவரமாகச் சொல்லிவிட்டேன். ஆகவே, இப்போது மதனவல்லிச் சீமாட்டியும், ஷண்பகவல்லியும் என்னைப் பற்றிய மர்மத்தையெல்லாம் தெரிந்து கொண்டு விட்டார்கள். நீ இன்னும் சில தினங்களுக்குள் ஷண்பகவல்லியை மணந்துகொண்டு விடுவாய் என்பது நிச்சயம். ஆகவே, உனக்குக் குறைந்தது வருஷத்துக்கு இரண்டாயிரம் பவுனாவது வரும்படி வரக்கூடிய வகையில் ஏதேனும் மூலதனம் உனக்காக வைக்க வேண்டியது எனது கடமையாக இருக்கிறது' என்று கூறினார்.

இதைக் கேட்டதும் மோகனதாஸ் அதிக ஆச்சரியத்துடன், 'இல்லவே இல்லை, முடியாது. தங்கள் மூலதனத்தை வாங்கிக்கொண்டு அதனால் தங்களுக்குக் கடமைப் பட்டவனாக என்னை ஆக்கிக்கொள்ள முடியாது. இவ்வாறு சொல்வ

தற்காக என்னை மன்னிக்கவேண்டும். தங்களிடமிருந்து எவ்வளவோ உதவிபெற்ற நான் இப்படிச் சொல்வதால் என்னை நன்றிகெட்ட மனிதன் என்று நினைத்துவிடாதீர்கள்.' என்று கேட்டுக்கொண்டான். அதற்கு அப்பெரியார், 'அப்பா ! நான் அப்படியொன்றும் உன்னைப்பற்றித் தவருக நினைக்கவில்லை. நீ சரியான முறையில் உணர்ச்சிகொண்டுதான் அவ்வாறு கூறியிருக்கிருய். அந்த உயரிய குணத்துக்காக நான் உன்னைப் பாராட்டவும் செய்கிறேன். ஆயினும் என் யோசனையின்படியும், நிலைமையின்படியும் நான் உனக்கு இதைக் கொடுக்க வேண்டியவனுக இருக்கிறேன். அதெப்படி என்பதையும் நான் சொல்லிவிடுகிறேன். உன் காதலியான ஷண்பகவல்லி என்னிடமிருந்து இவ்வாறு உதவிபெற உரிமை யுடையவளாக இருக்கிருள். ஆகவே உனக்குக் கொடுக்கப்போகும் இந்தப் பணத்தையும் அவளுக்காகவே உன்னிடம் ஒப்படைக்கிறேன். ஒரு கணவன் தன் மனைவிக்குக் கடமைப்பட்டவனுக இருப்பதை நான் விரும்பாததால் அப்பணத்தை உன் பெயரால் எழுதிவைக்கத் துணிந்தேன். மேலும் அவளைப் போன்ற அந்தஸ்திலுள்ள ஒரு பெண்ணை நீ விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்ருல் இவ்வளவு வரும்படி உனக்கு வேண்டாமா ? இப்போது நீ செய்யும் தொழிலில் உனக்கு இவ்வளவு வரும்படி வாதல்லவா? ஆகவே நான் செய்யும் காரியத்தில் நீ குறுக்கிடவேண்டாம். எல்லாம் நன்மைக்காகவே நான் செய்கிறேன். ஷண்பகவல்லி என்னிடமிருந்து இதைப்பெற எப்படி உரிமை பெற்றிருக்கிருள் என்பதை இப்போது சொல்கிறேன் கேள்,' என்ருர்.

இதற்குள் மோகனதாஸ், 'எனதன்புள்ள ஐயா, தாங்கள் செய்யும் உபகாரத்துக்காகத் தங்களை வாழ்த்துவதற்குரிய பதங்கள் எந்தப் பாஷையிலும் இல்லாமலிருப்பதைக் கண்டு

வருந்துகிறேன்! என்று சொல்லி ஒருவாறு அடக்கத்துடனும் மேற்கொண்டு என்ன செய்வதென்று தோன்றாதவன் போலும் நின்றான். அப்போது கொடையிற் சிறந்த அப்பெரியார், 'நீ என்னவெல்லாம் சொல்வாய் என்பதை நான் அறிவேன்' என்று சொல்லிவிட்டு ராஜலட்சுமியின் பக்கமாகத் திரும்பி, 'பெண்ணே, உன்னைப்பற்றி ஒருவார்த்தை சொல்ல விரும்புகிறேன். நாடகக் கம்பெனியில் நீ நடிப்பதாக ஒப்புக்கொண்ட காலவரையறை கடந்துவிட்டதென்றே நினைக்கிறேன். அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவும், இன்னும் சொற்பகாலம் தங்கள் கம்பெனியில் நடிக்கும்படியும் உன்னைக் கேட்டுக்கொள்வார்கள். அதனால் உனக்குப் பெருத்த வருவாய் கிடைப்பதாயும் இருக்கலாம். எனினும் நீ அதை இன்றுடன் விட்டுத் தொலைக்கவேண்டுமென்று நான் கூறுகிறேன். உன் தொழிலை விட்டுவிடுவதால் நீ உன் சகோதரனின் தயவை எதிர் பார்க்கும்படியான நிலைமையிலும் இருக்கவேண்டியதில்லை. நீங்கள் உன்னுடையதையே அவனுடையதாகவும் அவனுடையதையே உன்னுடையதாகவும் எவ்வித வித்யாசமும் இன்றி அனுபவிக்கும் ஒற்றுமையையும் அன்பையும் பெற்றிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆயினும் அவனும் ஷண்பகவல்லியும் அவர்களுடைய வரும்படியை அனுபவிக்கட்டும். நீ உனக்கென்று தனியான ஒரு வருவாயைப் பெறவேண்டும். ஆதலால் வருஷம் ஐந்நூறுபவுன் வரும்படி வரக்கூடிய மூலதனத்தை உனக்காக எழுதிவைக்க எனக்கு அனுமதிகொடு,' என்று கேட்டார்.

அப்போது ராஜலட்சுமி, 'ஐயா, பெரியாரே, எனக்காக அவ்வளவு பெரிய தொகையைத் தாங்கள் நஷ்டப்படுவதா,' என்று கேட்கப் போனபோது அவர் குறுக்கிட்டு, 'அப்படியெல்லாம் பேசாதே. நான் பெரிய பணக்காரன். நீ நினைத்

திருப்பதைவிட அதிக பணக்காரன் என்பதை இப்போதே னும் தெரிந்துகொள். உங்கள் முகத்தைப் பார்க்கும்போதே நீங்கள் இனி நான் உங்களிடம் சொல்லப் போவதை அதா வது நான் 'சாதாரண செல்வநாதர் அல்ல என்பதை முன்ன தாகவே யூகித் தறிந்துவிட்டதாக வல்லவோ தோன்றுகிறது' என்றதும் மோகனதாஸ், 'ஐயா தாங்கள் செல்வநாதர் அல்ல; மனோகரம் பிரபுவாகவே இருக்கவேண்டு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை' என்று சந்தோஷத்துடனும் பரபரப்புடனும் கூறினான். உடனே சகோதரனும் சகோதரியும் எழுந்து அப் பிரபுவின் முன் மண்டியிட்டு வணங்கி, 'பிரபுவே, தங்களுக் குரிய முறையில் வணக்கம் செலுத்தவோ, புகழவோ எங்க ளுக்குச் சிறிதும் தெரியவில்லை. மேலும் நாங்கள் அதற்கு யோக்கியதை அற்றவர்களாகவும் இருக்கிறோம்' என்று கூறி வணங்கினார்கள். அச்சமயம் கருணாமூர்த்தியான அப்பிரபு அவர்களிருவரையும் கையால் தொட்டு எழுப்பித் தங்கள் ஆசனத்தில் பலவந்தமாக உட்காரச்செய்து, 'குழந்தைகளே! நான் உங்களுடைய குணாதிசயங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து விட்டேன். உங்களுடைய பரிசுத்தமான, ஒழுக்கத்துடன் கூடிய நற்குணத்தைக் கண்டு அளவிலா ஆனந்தமும் ஆச்சர்யமும் அடைகிறேன். மோகனதாஸ்! நீ என்னுடைய சகோதரன் புத்திரியான ஷண்பகவல்லியைக் காதலிக்கிறாய் என்பதற்காக மட்டுமல்லாமல் உன் சொந்த ஹோதாவிலேயே உனக்கும் உன் சகோதரிக்கும் நான் மதிப்பு வைத்து அதற்கேற்றபடி நடந்து கொண்டிருக்கி றேன் என்பதை நீங்களே அறிவீர்கள்- இனி நான் உங்களி டம் எப்படிப்பட்ட இரகசியத்தையும் மறைத்துவைக்க விரும் பவில்லை யாதலால் சில உண்மைகளை இப்போது சொல்லப் போகிறேன். மேலும் இனி நீங்கள் என் மாளிகைக்கு வந்து கௌரவம் மிக்க விருந்தினராக இருக்கவேண்டு மென்றும்

கேட்டுக் கொள்கிறேன். அங்கே உள்ள சிலரை உங்களுக்குக் காண்பிக்க வேண்டுமென்பது என் அவா,' என்று கூறினர்.

பிறகு அவர் அவ்விருவரிடமும், மனோகரம் பிரபுவாகிய தான் வாலிபத்தில் ரங்கநாயகியின்மீது காதல்கொண்டது முதல் தன்னுடைய விருத்தாந்தங்கள் எல்லாவற்றையும் விவரமாகக் கூறியதோடு தன் மக்களில் ஒருத்தியான நவநீதம், இந்திராபாய் சந்திராபாய் என்னும் பெயர்களைக்கொண்டு நடத்திய திருவிளையாடல்களையும், அப்படிப்பட்ட பல கஷ்ட சந்தர்ப்பங்களிலும் அவள் கற்பு நிலையினின்றும் தவறாமல் பெண் என்னும் முறையில்தான் வெட்கப்படக்கூடிய எக்காரியத்தையும் செய்யவில்லை என்பதையும், மற்றும் தான் செல்வநாதர் என்னும் மறுபெயர் கொண்டு கண்டுபிடித்த விவரங்களையும் சொன்னர். அதை அவர்களிருவரும் அதிக கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் எல்லாவற்றையும் சொல்லி முடித்தபின்னர் சகோதரனும் சகோதரியும் அவரது வெற்றிக்காக அவரைப்பாராட்டி அவர் தன் இருமக்களையும் பெற்றதுடன் அன்புக்களஞ்சியமான மாதையும் பெற்று அவளை மறுவிவாகம்செய்துகொள்ளப் போவதற்கான காலம் வந்திருப்பதற்காகவும் சந்தோஷம தெரிவித்தனர்.

மனோகரம்பிரபு மீண்டும்பேச ஆரம்பித்து, 'மோகனதாஸ் நாம் இன்னும் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும், அதாவது பாதகியாகிய ஹேமவதி சீமாட்டியை எதிர்த்து நாம்யோசித்துவரும் விஷயம்தான். சந்திரசேகரம்பிரபு எனது சகோதரன் மகன் என்பது இப்போது தெரிந்து விட்டதல்லவா? அவன் மீது தன் முழு ஆதிக்கத்தையும் செலுத்த அவள் முயன்று வருவதாகவும எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. ஆதலால் அவனை அவளுடைய பிடியினின்றும்

விலக்க வேண்டியதும் எனது கடமையாக இருக்கிறது. ஆனால் அவள் அவனைக்கொண்டு உன் உயிரையே மாய்க்க முயன்றதையும் அதற்கு அவன் இணங்கியதையும் கவனிக்கும்போது அவன் அவளுடைய மோகாந்தகாரத்தில் அப்படியே மூழ்கிவிட்டிருக்கிறான் என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. அவள் மகா கொடிபோனுகிய ராட்சஸ குப்பனுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருப்பது ஏதோ ஒரு பயங்கரமான காரியத்தைச் சாதிக்கவே என்பதை அவன் அறிந்துகொள்ள முடியவில்லை. ராட்சஸ குப்பனை எதற்காக அவள் அமர்த்திக் கொண்டிருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஹேமவதி சிமாட்டி சம்பந்தமாக ஏதேனும் விசேஷமானதால் எனக்கு அறிவிக்கும்படி நானும் ராட்சஸகுப்பனிடம் சொல்லித் தக்க சன்மானம் அளிப்பதாகவும் சொல்லி யிருக்கிறேன். நான் தாராளமாகச் சன்மானம் செய்வேன் என்பதை அவனும் அறிந்திருக்கிறான்,' என்றார். அப்போது மோகனதாஸ், 'பெரியாரே, அந்தக்குப்பன் உமக்கு ஏதேனும் தகவல் தெரிவித்தானா?' என்று கேட்டான்.

அதற்கு அப்பெரியார், 'ஆம்; இன்று பகல்தான் அவன் ஒரு துண்டுக் கடிதம் அனுப்பினான். அதில் நானும் நீயும் நாளை இரவு சுமார் ஒன்பதுமணிக்கு நடுக்குப்பத்திலுள்ள அந்த பாழும் மாளிகைக்குப் போகவேண்டுமாம். அப்போது அவன் நம்மிடம் சொல்ல ஏதோ முக்கிய சில விஷயங்களை வைத்துக்கொண்டிருக்கிறானும்' என்று கூறலும் பீதியடைந்த ராஜலட்சுமி, 'என தன்புள்ள பிரபுவே, அந்தப் பயங்கரமான இடத்துக்குச் சென்று அங்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளை அனுபவிக்கவேண்டிய நிலைமையில் சிக்கிக்கொள்ளத் தங்களுக்குப் பயமில்லையா?' என்று கேட்டாள். அப்போது அப்

பெரியார் தைரியமாக, 'பெண்ணே! நீ சிறிதும் அஞ்சாதே. அந்த இடத்தில் பலரும் கூடியிருக்கக்கூடிய ஒரு வேளையிலேயே எங்களை வரும்படி அவன் சொல்லியிருப்பதால் நாம் எதற்கும் பயப்படவேண்டியதில்லை. அவர்கள் எல்லாருமே அயோக்கியர்களென்றாலும் மொத்தமாகச் சேர்ந்து எந்தவித குற்றத்தையும் செய்ததில்லை. ராட்சஸகுப்பனோ பணத்தையே தெய்வமாகப் போற்றுகிறவன். ஆகவே என்னிடத்திலிருந்து அவனுக்குப் பணம் கிடைக்குமென்று அவன் அறிவானாதலால் என்னைக் கொன்றுவிட அவன் துணியமாட்டான். நாளைதினம் பகல் இரண்டு அல்லது மூன்றுமணிக்கு மதனவல்லிச் சீமாட்டியும், ஷண்முகவல்லியும் இவ்விடம் வருவார்கள். மாலை ஐந்துமணிக்கெல்லாம் என் வண்டி இங்கு வரும். அதில் ஏறிக்கொண்டு என் வீட்டுக்கு எங்களுடன் விருந்துண்பதற்காக வரவேண்டும். ரங்கநாயகிச் சீமாட்டி, சபாபதி, நவநீதம், மோகனசுந்தரம் ஆகியவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க விரும்புகிறேன். பிறகு இரவு எட்டு மணிக்கு நானும் மோகனதாஸனும் நடுக்குப்பத்துக்குப் புறப்படுகிறோம். ஆனால் நான் எங்கே, எதற்காகப் போகிறேன் என்பது என்வீட்டில் யாருக்கும் தெரியக்கூடாதாதலால் நான் வேறு ஏதேனும் சாக்குச் சொல்லிவிட்டே புறப்படவேண்டும். நாளைய இரவு ராட்சஸ குப்பனைப் பார்த்துப் பேசிய பிறகுதான் ஹேமவதி சீமாட்டியின் விஷயத்தில் நாம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்பதைக் கவனிக்கவேண்டும். அவள் சம்பந்தமான பல விஷயங்களையும் நாம் தக்கபடி சேகரித்துக் கொண்டுவிட்டால்தான் அவளை எளிதில் பணியும்படி செய்யலாம். நான் இருவேலைகளைச் செய்ய நினைக்கிறேன். அதாவது என் சகோதர புத்திரனை சந்திரசேகரத்தை அவளிடமிருந்து பிரிக்கவேண்டுவது ஒன்று. உன்னைப்பற்றி அவள் பரவச்செய்துள்ள புகார் தவறு என்

யதை வெளிப்படுத்தி அவளுடைய உண்மையான யோக்கிய தையைப் பாவச் செய்யவேண்டுமென்பது மற்றொன்று. சந்திரசேகரம் பொல்லாத தீயவழிகளில் இறங்கிக் கெட்ட பழக்கவழக்கங்களிலேயே மூழ்கிவிட்டிருப்பதாக அறிந்து நான் அதிக கவலைப்படுகிறேன்' என்று கூறிமுடித்தார்.

அப்போது பிறரை மன்னிப்பதில் அவாவுடைய மோகனதாஸ் 'பெரியாரே, அவன் கூடியவிரைவில் நல்ல நிலைமைக்கு வந்துவிடுவா ' என்றே நம்புவோம். என் சம்பந்தப்பட்டவரையில் அவன் எனக்கு இழைத்த தீங்கை நான் மறந்து அவனை மன்னித்துவிடுகிறேன்' என்றான். அதற்கு அவர், 'நீ தாராள மனப்பான்மை யுடையவனாயிற்றே. அப்போதே நீ அவனை மன்னித்துவிட்டாய் என்பதை நான் அறிவேன்' என்றதும் அவன், 'அப்படி அவனை நான் முன்னதாகவே மன்னிக்கவில்லையென்றாலும் இப்போது அவன் தங்களுடைய நெருங்கிய பந்து என்று தெரிந்த பின்னராவது நான் அவனை மன்னித்துதானே ஆகவேண்டும்' என்றான். பிறகு மனோகரம்பிரபு அங்கிருந்து புறப்படுவதற்காக எழுந்தார். சகோதரனும் சகோதரியும் அவரை வழியனுப்புவதற்காக அவருடன் வெளி வாயிற்படிவரை வந்தார்கள். அவர், அவ்விருவருடனும் அன்பாகக் கையைக் குலுக்கிவிட்டு, சற்றுத் தயங்கி நின்றதும் அவர் தன் சகோதரனுடன் ஏதோ தனியாகப் பேச விரும்புகிறார் என்பதை அறிந்துகொண்ட ராஜலட்சுமி உள்ளே போய்விட்டாள். பின்னர் அவர் மோகனதாஸின் கையைப் பிடித்துக்கொண்டு சிறிது தூரம் வரை அழைத்துச் சென்று மெதுவான குரலில், 'மோகனதாஸ்! எனக்கும் ரங்கநாயகிச் சீமாட்டிக்கும் இடையில் நிகழ்ந்த எல்லாவற்றையும் நீ அறிந்திருக்கிறாய். உலகம் அவளைத் தூற்றும். அவள் கணவனுக்குத் துரோகம் செய்து

என்னிடம் விபசாரம் செய்தாளென்றும், நான் அவளைக் கெடுத்துவிட்டேனென்றும் உலகம் கூறும். நீயும் உன் சகோதரியை அழைத்துவராப் பின்தங்கினால்' என்று ஏதோ சொல்வதற்குள் மோகனதாஸ், 'பிரபுவே, இல்லவேயில்லை. தாங்கள் அவ்வாறு பேசலாகாது. நாளையதினம் ஐந்து மணிக்கெல்லாம் தங்கள் வண்டிவருமா என்று ஆவலுடன் காத்திருந்து அதில் தங்கள் மாளிகைக்கு வந்ததும் அங்குள்ளவர்கள் அனைவரையும் பிரியமாகவும் அன்புடனும் அறிமுகம் செய்துகொள்வோம்' என்று கூறினன். பின்னர் மனேகரர் ஒன்றும் பேசாமல் அவனிடம் அனுமதிபெற்றுத் தம் மாளிகைக்குப் புறப்பட்டார்.

:(o):

85-வது அத்தியாயம்

காதல் விஷயங்கள்

மேற்கூறிய விஷயம் நடந்த மறுநாள் பகல் சுமார் நான்கு மணிக்கு மனேகரம் பிரபுவின் குமாரனை மோகன சுந்தரம், பெரிபாரான மனேகரம் பிரபுவின் மாளிகையைச் சேர்ந்த தோட்டத்தில் தனியாக உலாவிக்கொண்டிருந்தான். வெயில் அவ்வளவாக உக்கிரமாக இல்லாமலிருந்தும் அவன் தனியாக ஏதேனும் சிந்திக்கவேண்டுமென்னும் எண்ணத்துடனும் தன்னை வேறுயாரும் பார்க்கக்கூடாதென்னும் எண்ணத்துடனும் ஒருமரத்தின் அடியில் உட்கார்ந்தான். அவன் ஏதோ ஒரு செய்தியை ஆவலுடன் எதிர் பார்ப்பவன்போல் காத்திருந்தான். யாரோ தன்னை நோக்கிவரும் காலடிசத்தம் கேட்பதுபோல் அவனுக்குத்

தோன்றும். ஆகவே அவன் எட்டிப்பார்ப்பான்; யாருமில்லை என்று தெரிந்ததும்', 'சீ, எவ்வளவுநேரம் சம்பாஷிப்பது?" என்று தனக்குள் சொல்லிக்கொள்வான். ஆனால் சிறிது நேரத்துக்குப் பின்னர் அவனுடைய மூத்தசகோதரியான நவநீதம் அவனை நோக்கிவருவதைக் கண்டான். அவள் மெதுவாகவும் உற்சாகமின்றியும் நடக்காமல் விரைவாகவும் பரபரப்புடனும் நடந்து வந்ததால் அவள் தனக்கு ஏதோ சந்தோஷச்செய்தி கூறவருகிறாள் என்று உணர்ந்தான். ஆகவே அவள் சமீபத்தில் வந்ததும், 'சகோதரியே! என்ன சங்கதி? நமது தகப்பனார் என்ன சொன்னார்' என்று ஆவலுடன் கேட்டான். அதற்கு அவள், 'அன்புள்ள சகோதர! நாம் இருவருமே தைரியத்துடன் நம்பக்கூடிய வகையில் அவர் பேசியிருக்கிறார்' என்றாள்.

இதைக்கேட்டதும் மோகன சுந்தரத்துக்குச் சந்தோஷம் அதிகமாயிற்று. அவன் தன் சகோதரியை அன்புடனும் ஆர்வத்துடனும் தழுவிக்கொண்டான். பின்னர் அவள் பின்வருமாறு சொன்னாள். நீ என்னிடம் ராஜேஸ்வரிக்கும் உனக்கும் இடையில் நிகழ்ந்த காதல் சம்பவங்களையெல்லாம் சொன்னதை அப்படியப்படியே நான் நமது தந்தையாரிடம் தெரிவித்தேன். அவர் முதலில் சிறிது கஷ்டத்தை அடைந்தார். அது ஏனெனின் ராஜேஸ்வரி உன்னிடம் காட்டியது காதல் அல்லவென்றும் அது வெறும்மோகமேயென்றும் கூறினார். ஆனால் தான் நினைப்பதே சரியாக இராமல் இருக்கலாமென்றும் ஒப்புக்கொண்டார் என்றதும், மோகனசுந்தரம், 'ஆம்; அவர் நினைப்பது தவறுதான். அவள் என்னை ஆவலுடன் நேசிக்கிறாள் என்பதை நான் அறிவேன். அவள் உண்மையிலேயே என்னைக் காதலிக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை' என்று ஆர்வத்துடன் கூறினான். அப்போது நவநீதம், 'சகோதரா உண்

மையாகவே இருக்கலாம். நீ அவளிடம் அதிக ஆசைகொண்டிருக்கிறாய் என்பதையும் உத்தேசித்தே நமது தந்தையார் இதில் சிறிது சிரத்தைகொண்டிருக்கிறார். மேலும் அவர் ராஜேஸ்வரியின் தாயாரான ஹேமவதி சீமாட்டியைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளவில்லை. மேலும் சந்திரசேகரம் பிரபுவின் விஷயமாகவும் மோகனதாஸ் சம்பந்தமாகவும் பிரபுவுக்கும் அவளுக்கும் மனஸ்தாபம் அதிகரிக்குமென்றும் தெரிகிறது. ஆதலால் அச்சீமாட்டியுடன் எப்படி சம்பந்தம் வைத்துக் கொள்வதென்றும் அவர் யோசனைசெய்கிறார்' என்று கூறினாள். அதற்கு அவன், 'அவ்வளவுதானே, இச்சந்தர்ப்பங்களைத்தவிர, கூடாது என்று அவர் ஒரேயடியாகச் சொல்லிவிடவில்லையே' என்று கேட்க அவள், 'இல்லவே இல்லை. அவர் மறுத்துவிட்டாரென்று நான் முன்னரும் கூறவில்லையே. மனத்தில் தோன்றும் ஆசையை நிராகரிப்பதால் என்ன பலன் ஏற்படுமென்பதை அவர் அறிவார். ஆதலால் இதை மறுக்கமாட்டார் ஆயினும் ராஜேஸ்வரியின் அன்பைச் சோதிக்கவேண்டுமென்பது அவரது அபிப்பிராயம். அதற்குத் தக்க ஏற்பாடும் அவரே செய்கிறாராம். நீ இன்னும் இரண்டு மூன்று தினங்களில் கிருஷ்ணகிரிக்குப் போகவேண்டியிருக்கும்' என்றாள்.

இதைக் கேட்ட மோகனசுந்தரம், 'ஓ, அந்த நிபந்தனையை நான் தாராளமாக ஒப்புக் கொள்கிறேன். நான் என் தந்தைக்கும் எனது சகோதரியாகிய உனக்கும் வந்தனம் செலுத்துகிறேன்' என்றான். அதற்கு அவள், 'சகோதரா! எனக்கு நீ வந்தனம் செலுத்த வேண்டியதில்லை. நீ நடத்தப்போகும் சோதனையில் உனக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனைசெய். நான் நம்மிருவருடைய சங்கதியையும்

தகப்பனரிடம் சொல்லும்போது அவர் மிகவும் கவனமாகத் தான் கேட்டார். உடனே அவர் இதைப்பற்றி நமது தாயுடன் ஆலோசிக்கப் போய்விட்டார். அப்போது நான் தன்னந் தனியாக நின்று கொண்டிருந்தேன். நம்முடைய எண்ணம் நிறைவேருமற் போய்விடுமோ என்னும் அச்சம் எனக்கு இடையிடையே தோன்றிற்றென்ருலும் காரியம் ஜெயமாகும் என்னும் நம்பிக்கைதான் அதிகமாக இருந்தது' என்ருள். அவன், 'சரிதான், நீ நம்பியது குற்றமில்லை. உன் சம்பந்தமாகத் தந்தையார் என்ன சொன்னர்,' என்று கேட்க நவநீதம், 'நாளைக்கு மறுநாள் என் காதலனை நளினரஞ்சன் பாபு இங்கு வரும்போது தந்தையே அவனைச் சந்தித்துப் பேசுவாராம். அப்படிப் பேசுவதால் அதிருப்திகரமான நிலைமை ஒன்றும் ஏற்பட்டு விடாதென்றே நினைக்கிறேன். நாளைமாலை நமது தந்தையும் தாயும் பரிசுத்த சடங்காகிய விவாகத்தை முடித்துக்கொள்வார்கள் என்பதை நீயும் அறிந்திருக்கலாம். அதற்குத்தக்க ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்று வருகின்றன இந்த விவாகம் முடிந்ததும் பின்னலேயே வேறுபல விவாகங்கள் நடக்குமென்று தெரிகிறது' என்ருள்.

அப்போது மோகனசுந்தரம் அதிக சந்தோஷத்துடன், 'அன்புள்ள சகோதரியே! நீ சொன்னபடியே சபாபதிக்கும் கோகிலத்துக்கும், உனக்கும் நளினரஞ்சனுக்கும், எனக்கும் ராஜேஸ்வரிக்கும் கலியாணமானல் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்?' என்று சொன்னன். அதற்கு அவள், 'ஆம், எல்லாருக்கும் ஒரேநாளில் கலியாணம் முடிந்தால் மிகச்சந்தோஷமே. எப்படி நடக்கிறதென்று பார்ப்போம்; என்ருள் அதற்கு மோகனசுந்தரம், 'சகோதரியே, இப்பால் நீயும் காதல்இன்னதென்பதை உணர்ந்து கொண்டுவிட்டாய். முதலில் உன் மனம் காதலையே அறியாமல் இருந்தது என்று நீயே சொன்

ளுய்; ஆனல் இரண்டொருமுறை சமீபத்தில் நீயும் நளினாஞ்சனும் பார்த்துச் சம்பாஷிக்கவே காதல் உன்னிடம் கொழுந்துவிட்டெரியலாயிற்று. காதலால் தகிக்கப்பட்டால் ஆளேவேறுவிதமாக மாறிவிடுவதை நீ அறிகிருய் அல்லவா? உங்கள் இருவரிடையிலும் ஆதியிலேயே காதல் இருந்திருக்கிறது. சமய சந்தர்ப்பங்களும் அந்தஸ்துகளும் உங்களிருவருக்குமே சரியாக இல்லாமல் இருந்தபடியால் அது வெளியில் தெரியாமல் இருந்தது. இப்போது இருவருமே நல்ல அந்தஸ்திலும் சௌகரியமான நிலைமையிலும் இருப்பதால் அக்காதல் வெளிப்பட்டு உன்னைத் தகிக்கவும் ஆரம்பித்திருக்கிறது. இதனல் உன் மனேபாவமே இப்போது நூதனமுறையில் மாறி இருக்கவில்லையா' காதல் உலகில் வாழ்பவர்களின் நிலையே வேறு என்பதேனும் இப்போது உனக்குத் தெரிகிறதல்லவா? என்றுகேட்க, அவள் சகோதர! நீ சொல்வதில் சில உண்மைகள் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன் ஆனல் நாம் இப்போது அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். நம்மாளிகைக்கு இப்பாது கோகிலம் வீட்டாரும், மோகனதாஸ் வீட்டாரும் விருந்துக்கு வரப்போகிருர்கள். அவர்களை யெல்லாம் பார்த்து சந்தோஷப் படக்கூடிய காலம் வந்திருக்கிறது. நாம் போய் மாலை ஆகாரத்துக்கான உடைகளை அணிவோம் வா' என்று சொன்னுள்.

உடனே சகோதரனும் சகோதரியுமான அவர்கள் இருவரும் மாளிகைக்குச் சென்ருர்கள். சற்றுநேரத்துக்கெல்லாம் ஒவ்வொருவராக அம்மாளிகையில் கூடினர்கள், உண்மையிலேயே பரஸ்பரம் கண்டு களிக்கக்கூடிய ஒருகூட்டம் அங்கு சேர்ந்தது. மோகனசுந்தரம் ஹேமவதி சீமாட்டியின் வீட்டில் சேவகனுக இருக்கும்போது அவளுடைய மக்களுக்குச் சங்கீதமும் சிற்பமும் கற்றுக் கொடுப்பவன் என்னும் முறையில்

186582

மோகனதாஸ் அம்மாளிகைக்குச் செல்லும்போதெல்லாம் அவனைப் பார்த்திருக்கிறான். அப்போதே சேவகனான அவனுடைய அழகைக்கண்டு மோகனதாஸ் பிரமித்ததுண்டு. இப்போது அவன் பிரபுவீட்டுப் பிள்ளைபோல் உயரிய ஆடைகளை அணிந்து கொண்டிருந்ததால் கம்பீரத் தோற்றத்துடன் காணப்பட்டான். ஆகவே மோகனதாஸ் மோகனசுந்தரத்தின் கையை ஆவலுடன் பிடித்துக் குலுக்கினான். அது, 'நாம் இருவரும் இதுமுதல் நெருங்கிய சினேகிதர்கள் ஆவோம்' என்று சொல்வதுபோல் இருந்தது. மோகனதாஸின் சகோதரியான நாடக உலகில் பிரசித்திபெற்ற ராஜலட்சுமி வெறும் வெண்மையான எளிய உடையை அணிந்திருந்தாளென்றாலும் அவள் பார்வைக்குமிக அழகாய்க் காணப்பட்டாள். அவளை ரங்கநாயகிச்சீமாட்டி மிக்க அன்புடன் வரவேற்றாள். அவள் விரைவில் கோகிலத்துடனும் நவநீதத்துடனும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு அவர்களுடைய அன்புள்ள சினேகிதையானாள். இச்சமயத்தில் இவ்வாறு குறிப்பிடுவதும் பொருந்தும், அதாவது அந்த இரத்தினபுரி மொத்தத்திலுமே அழகிலும், யௌவனத்திலும், குணஇசயத்திலும் நவநீதம், ராஜலட்சுமி, கோகிலம் ஆகிய இந்த மூவரையும் தோற்கடிக்கக் கூடிய பெண்களே இல்லையென்று நிச்சயமாகச் சொல்லலாம் என்பதே. அதுபோலவே மோகனதாஸும், மோகனசுந்தரமும் இணையற்ற அழகானவர்களாகவும் யோக்கியர்களாகவும் காணப்பட்டனர். சபாபதியின் சமாசாரமென்ன என்று கேட்கலாம். அவனும் தேகநிலைமை நன்றாகத் தேறியவனாய், கள்ளங்கபடமற்ற நெஞ்சினனாய், அன்பு கூர்ந்த முகத்துடன் காணப்பட்டான், கோகிலத்தின் தாயாரும், சகோதரனும் கூடவந்திருந்தார்கள். ஆகவே இவர்களனைவரும் சேர்ந்த அக்கூட்டம் ஆனந்தக்கடலில் திளைக்க ஒரு கோஷ்டியாகவே இருந்ததென்பதில் சந்தேகமில்லை.

இரவு எட்டுமணி அடித்ததும் மனோகரம்பிரபுவும் மோகனதாஸும் ஒருவண்டியில் உட்கார்ந்துகொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றார்கள். அந்தவண்டி நடுக்குப்பத்தை நோக்கி விரைவாகச் சென்றது. மனோகாரும் மோகனதாஸுக்கும் நடந்த ஒரு சம்பாஷணையின் இடையில், 'அப்படியானால் ஷண்பகவல்லியும், ராஜலட்சுமியும் பரஸ்பரம் சகோதரிகளைப்போல் அன்புடன் நடந்து கொள்கிறார்கள்' என்று சொன்னார். அதற்கு மோகனதாஸ், 'ஆம்; ஷண்பகவல்லியுடன் பேசுவதில் ராஜலட்சுமி ஆனந்தங் கொள்கிறாள் என்பது உண்மையே. எப்படி வேறுவிதமாக இருக்கமுடியும்? உண்மையிலேயே பரிசுத்தமாகவும் யோக்கியமாகவும் இருக்கும் ஒரு ஹிருதயம் அதேபோன்ற மற்றொரு ஹிருதயத்தை நேசிக்காமல் இருக்கமுடியுமா ? என்றதும் அப்பெரியார், 'ஆம்; நானும் அப்படித்தான் எதிர்பார்த்தேன். அவர்கள் இருவரும் சந்தித்ததும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நேசிப்பார்கள் என்றுதான் நினைத்தேன். ஷண்பகம் முன்னதாகவே என் சகோதரியிடம் அன்பு கொண்டிருந்தாள். அதுபோலவே ராஜலட்சுமியும் உன் காதலியான ஷண்பகவல்லியிடம் அன்பு கொண்டிருந்திருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. மதனவல்லிச் சீமாட்டியைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் ?' என்றுகேட்க, மோகனதாஸ், 'சீமாட்டியா ? மிகவும் நல்லவளும் சாதுவுமாயிற்றே. உண்மையிலேயே இன்று பகல் ஷண்பகவல்லியும், மதனவல்லிச் சீமாட்டியும் எங்கள் வீட்டுக்கு வந்ததைக் கண்டு நாங்கள் அதிக பெருமை கொண்டோம். நாளைக்கு மறுநாள் நாங்கள் இருவரும் மதனவல்லிச் சீமாட்டியின் மாளிகைக்கு விருந்துக்குச் செல்லவேண்டும்,' என்றான். அப்போது அவர் 'அச் சங்கதி எனக்கும் தெரியும். ஏனெனின் நாங்களும் அன்று அங்கு வரப்போகிறோம். இதற்கிடையில் ரங்காயகி

யும் என்னை விவாகம் செய்துகொண்டு சீமாட்டியாக விளங்கு வாள். அன்று அக்கூட்டத்துக்கு நவநீதமும் சபாபதியும் கூட வருவார்கள்' என்றார்.

அப்போது மோகனதாஸ், 'ஏன்? தங்கள் அன்பார்ந்த குமாரனை மோகனசுந்தரம் வரமாட்டானோ?' என்று கேட்க அவர், 'இல்லை, அவன் வெளியூருக்குப் போகப் போகிறான். அவன் எதற்காகப் போகிறான் என்னும் சங்கதிகளை யெல்லாம் பின்னால் விவரமாகச் சொல்கிறேன். அதிருக்கட்டும். நீ முன்பு ஒருமுறை ஆபத்தினின்றும் காப்பாற்றினையே அந்த மாது இம்மாதம் 21ந் தேதி உன்னை உன் வீட்டில் சந்திப்ப தாகச் சொல்லியிருக்கிறாள் அல்லவா? அவளைப்பற்றி நாம் ஒன்றும் பேசவே இல்லையே' என்றார். அதற்கு அவன், 'ஆம் அம்மாது சென்ற 21ந் தேதி இரவு எனக்கு வாக்களித்து இம் மாதம் அதே தேதி அதே மணியில் என்வீட்டில் என்னைச் சந்திப்பதாகச் சொன்னதை நான் மறந்துவிடவில்லை. அம் மாது என்ன இரகசியத்தை எனக்கு அறிவிக்கப்போகிறாளோ என்றும் அடிக்கடி என்னையே நான் கேட்டுக்கொண்டதுண்டு. ஒருகால் அது பைத்தியம்பிடித்தவள் பேச்சோ என்று கூட நான் நினைப்பதுண்டு' என்று கூறினான். அதற்கு அப்பெரியார் 'இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை. நீ சொன்ன விஷயங் களையெல்லாம் கவனிக்கும்போது அவள் ஏதோ ஒருபெரிய இரகசியத்தை வெளியிடப்போகிறாள் என்றுதான் நான் நினைக் கிறேன், அம்மாதைப்பற்றி நான் சில விஷயங்களை உனக்குத் தெரிவிக்க வேண்டியதாக இருக்கிறது. அதாவது, என் நவ நீதம் என்னிடம் மோகன சுந்தரத்தைப்பற்றி, அவன் ஹேம வதி சீமாட்டியின் வீட்டில் தங்கியிருந்தபோது நடந்த சில சம்பவங்களைப்பற்றிக் கூறினாள். அப்போது நீ கூறிய தோற் றத்தையுடைய அதேமாது சிலசமயங்களில் ஆச்சர்யமான

விதத்தில் நெருக்கடியான சமயத்தில் ஹேமவதியினிடம் வரு வாளாம்,' என்றதும், மோகனதாஸ், 'அப்படியானல் அன் றையதினமும் அவள் ஹேமவதி சீமாட்டியின் மாளிகைக்கே சென்று கொண்டிருக்க வேண்டும். அவளும் ஹேமவதியைப் பற்றிப் பலவிஷயங்களைப் பேசினள். அவளுடைய மாளிகை யின் அருகில் நான் என்ன செய்கிறேன் என்றும், நான் அம்மாளிகைக்குப்போய் வந்தேனு என்றும் அவள் கேட்ட தோரணையைப் பார்த்தால் அவள் ஏதோ விஷயம் உணர்ந்த வள் போலவே தோன்றியது. நான் அம்மாளிகையில் சென் றதில்லை யென்று சொன்னபோது அவள் ஆச்சர்யத்துடன் என்னைப் பார்த்ததை நான் என்றென்றும் மறக்க முடியாது. அப்போதே அவளுடைய மர்மத்தைச் சொல்லும்படி நான் எவ்வளவோ கேட்டேன். அவள் எதையும் சொல்லவில்லை. அதுமட்டுமா ? ஹேமவதி என்னிடம் தவறுதலாக நடந்து கொண்டாள் என்று சொன்னபோது அது மெய்தானு என்று பலமுறை வற்புறுத்திக் கேட்டாள்; சரியானபதில் சொன்ன பின்னரே அவளுக்குத் திருப்தி ஏற்பட்டது' என்று கூறி னன்.

அப்போது மனேகார், ,ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது அவளுடைய மர்மத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவு யோசித்தா லும் முடியாது. அதேமாது தான் பலமுறை ஹேமவதி சீமாட்டியின் வீட்டுக்குப் போனவள் என்று நன்ருகத் தெரி கிறது. ஆகவே அவள் ஹேமவதி சீமாட்டியின் பல ரகசியங் களை அறிந்துகொண்டிருக்க வேண்டும். உன் தந்தையார் மா ணப்படுக்கையில் சொல்லி விட்டுப்போன நாடகக்கம்பெனி மானேஜரான கோவிந்தனைப் பற்றிய இரகசியம் ஏதேனும் அவள் அறிந்திருக்கலாமென்றே தெரிகிறது. எப்படியும் 21 ந் தேதி அதிக தூரத்தில் இல்லை. அன்று அவள் உன்னைச் சந்

திக்கும்போது நானும் உடன் இருப்பேன். அப்போது எல்லா விஷயங்களும் தெரிகிறது நாம் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டது' என்றார்.

86-வது அத்தியாயம்.

பயங்கர விபத்து.

மனோகரம் பிரபுவும் மோகனதாஸனும் ஏறிவந்த வண்டி நடுக்குப்பத்தின் அருகில் சென்றதும் வண்டியை நிறுத்தச் சொல்லி அதில் இருந்து இறங்கித் தாங்கள் திரும்பி வரும்வரை அங்கேயே காத்திருக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றனர். அவர்கள் கோபாலன் தம்பதிகளுடைய வீட்டுக்குச் சென்றனர். அந்த வீட்டில் பலகாலிகள் கூடிக்கொண்டு கூச்சல் போடுவது ஒரே கோஷ்டமாகக் கேட்டது. அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்து சென்றதும் கோபாலனும் அவனுடைய மனைவியும் அங்கிருந்தவர்களுக்கெல்லாம் மதுபானத்தை ஊற்றிக் கொடுப்பதைக் கண்டார்கள். அங்கே கூடியிருந்தவர்கள் தில்லானு, டப்பாமுதலிய பாட்டுகளைப்பாடிக் கொண்டு கூச்சல்போட்ட வண்ணமாகவே இருந்தனர். கோபாலன் மனோகரரையும் மோகனதாஸையும் கண்டதும் அவனுடன் பரிந்துவந்து அவர்களை வரவேற்று வேறு அறைக்கு அழைத்துச்சென்று உபசரித்தான். அப்போது பெரியார் கோபாலனைப்பார்த்து, 'அப்பா! இங்கே ஒரு குறிப்பிட்ட ஆசாமி இருக்கிறானா?' என்று கேட்டார். அதற்கு அவன், 'ஆம், ஐயா ராட்சஸகுப்பன் இருக்கிறான் அவன் சொன்ன வேளை தவறாமல் குறிப்பிட்ட வேளையில் வந்துசேர்வான்.

அவனை இன்னும் இரண்டொரு நிமிஷத்துக்குள் இங்கே அனுப்புகிறேன்' என்றான், அச்சமயம் அப்பெரியார் வேடிக்கையாக, 'ஏது, உன் வீட்டிலும் விருந்தாளிகள் கூட்டம் பெரிதாக இருக்கும்போல் இருக்கிறது; எப்போது பார்த்தாலும் ஜனங்கள் கும்பலாக இருக்கிறார்களே! என்றுகேட்க அவன், 'அவர்களால் எனக்குவருவாய் இருக்கிறவரையில் நானாவது என்மனைவியாவது அவர்களை ஒன்றும் சொல்லமாட்டோம். மேலும் அவர்களுக்கு மதுபானம் தேயிலை முதலிய எதைக் கொடுத்தாலும் நாங்கள் பணம் வாங்கிக்கொண்டு விடுவதுண்டு. இதில் பயமென்ன இருக்கிறது. நாங்கள் சர்க்காருக்கு இந்த விடுதியை நடத்துவதற்காக வரிசெலுத்தி விடுகிறோம். ஆனால் தண்ணீர் தீர்வைமட்டும் கொடுப்பதில்லை. ஏனென்றால் இதோ அருகில்செல்லும் கால்வாய் நீரையே நாங்கள் எல்லாவற்றிற்கும் உபயோகிக்கிறோம்' என்று தன் விவகாரத்தைப் பற்றிக் கூறினான்.

கோபாலன் சொன்னதைக் கேட்ட மனோகரர், சிரித்துக் கொண்டே, 'ஆஹா. அந்தக் கால்வாயிலுள்ள நீர் மிக்க நன்றாய் இருக்கிறது' என்று சொல்லிவிட்டு உடனே ஏதோ திடீரென்று நினைத்துக் கொண்டதே போல், 'அதிருக்கட்டும்; சமீபத்திலுள்ளபள்ளக்குடிசையில் கொலை நடந்ததே, அதைப் பற்றி ஏதேனும் தெரிந்ததா? கொலையாளி யார் என்பது கண்டு பிடிக்கப்பட்டதா?' என்று கேட்க, அவன், அக்கொலையைச் செய்தவன் அச்சமயத்திலும் தன் வீட்டிலேயே இருக்கிறான் என்பதை அறிந்திருந்தும் ஒன்று மறியாதவனே போல், 'இல்லை ஐயா; எனக்குத்தெரிந்து எதுவும் வெளியாக வில்லை; நான் ஏதும் அறியேன்; என்றான். அப்போது அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு ராட்சஸகுப்பன் உள்ளே நுழைந்தான், அவன் அங்கு மனோகாரும், மோகனதா

ஸம் இருப்பதைக்கண்டு அவர்களுக்கு மரியாதை செய்ப வன்போல் தன் தலையிலிருந்த தொப்பியை எடுத்து வணக்கம் செலுத்தினன். கோபாலன் மெதுவாக அவ்வறையை விட்டு வெளியே போய்விட்டான், குப்பன் அறையின்கதவை உள் பக்கமாகச் சாத்திக்கொண்டு மனேகாருக்கருகில் ஒருஆசனத் தில் அமர்ந்தான். மனேகாரரைப்பார்த்து, 'ஐயா, தாங்கள் என்னுடைய கடிதத்தைப் பெற்றுக்கொண்டீர்கள் என்றே தெரிகிறது' என்றுகேட்டு ஏதோ முக்கிய விஷயத்தைப் பேசுவான்போல் தயாரானன். அப்போது அப்பெரியார், 'அக்கடிதம் கிடைத்ததனால் தான் நாங்கள் இருவரும் இப் போது இங்கேவந்தோம். நீ எங்களிடம் அச்சீமாட்டியைப் பற்றிய முக்கிய விஷயத்தைச் சொல்வாய் என்று நம்புகிறோம்' என்ருர்.

அப்போது ராட்சஸகுப்பன் அவ்வறைக்கதவின் பக்க மாகத் திரும்பிப்பார்த்து, 'மெதுவாகப்பேசுங்கள், கோபால னும் அவனுடைய மனைவியும் பாம்புக்காதுகளை யுடையவர்கள் அவர்கள் சுவற்றோரமாக நின்று கேட்டுக் கொண்டிருப்பார் கள். நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்களென்பதை நான் இதுவரை யாரிடமும் சொல்லவேயில்லை. அவர்களுக் குத் தெரிந்துவிட்டால் எனக்கு நீங்கள் கொடுக்கும்பணத்தில் ஒரு பைசாவும் பாக்கியில்லாதபடி எல்லாவற்றையும் செல வழித்துவிடுவார்கள். நீங்கள் எனக்குக் கொடுக்கப்போவதெல் லாம் நூறு பவுன்தானே' என்றதும், மனேகார் சிரித்துக் கொண்டே, 'ஏது, நான் உனக்கு என்ன கொடுப்பேனென் பதை நீயாக அறிந்து கொண்டுவிட்டாய் போலிருக்கிறதே' என்று வேடிக்கையாகச் சொன்னர். அதற்கு அவன் அசட்டுச்சிரிப்புடன், 'இதில் என்ன ஆச்சர்யமிருக்கிறது ? நான் சொல்லப்போகும் இரகசியத்தைப் பொருத்துத் தானே

நீங்கள் கொடுக்கவேண்டிய தொகையும் இருக்கப்போகிறது. நான் இரண்டுமுக்கிய கடிதங்களைப்பற்றிப் பேசப்போகிறேன் ஆனால் இவ்விடத்தில் பேசுவதென்றால் எனக்குப்பயமாக இருக்கிறது. அவர்கள் கேட்டுவிட்டால் என்பாடு திண்டாட்டமே' என்றான். அப்போது அப்பெரியார், 'அப்படியானால் இந்த இடத்தில் சந்திக்கும்படி ஏன் தெரிவித்தாய்?' என்று கேட்க, அவன், 'என்னைப்போன்ற ஒருவனைத் தங்களைப் போன்ற கனவான்கள் இருவர் சந்திக்க வேண்டுமென்றால் இதைத்தவிர வேறு நல்ல இடம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. மேலும் நான் இங்கேயே வசிப்பவன்' என்றான்.

உடனே மனேகார் ஆச்சர்யத்துடன், 'என்ன, இங்கேயே வசிக்கிறாயா?' என்று கேட்க, அவன், 'ஆம்; நான் எனக்கென்று ஒரு தனியான அறையை இதேவீட்டில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அது மாடியின்மீது இருக்கிறது. மிக நெருக்கமாக இருக்கும். அது கிடக்கட்டும் இப்போது நாம் காரியத்தைக் கவனிப்போம், என்றதும் மனேகார், 'நீ பண விஷயத்தைப்பற்றிப் பேசுவதாயின் அதைப்பற்றிக் கவலைப் படாதே. எவ்வளவு தொகை அவசியமோ அதை வைத்துக் கொண்டிருக்கிறேன். பணத்தைத் தாராளமாக நான் கொடுப்பவன் என்பது உனக்குத் தெரியாதா? உன் கடிதங்களுக்கேற்ற தொகையை நான் உனக்குக் கொடுப்பேன் என்பதை நம்பு' என்றார்.

ராட்சஸகுப்பன் சிறிதுநேரம் மனத்திலேயே எதையோ ஆலோசித்தான். அவர்கள் இருவரையும் அழித்து விடுவதற்கு முன்பாக அவர்களிடமிருந்து எவ்வளவு தொகையை அபகரித்துக் கொள்ளமுடியுமோ அவ்வளவையும் அடித்தக்

கொள்வதென முடிவுசெய்தான். ஆனால் அப்போதே பணத்தைக் கேட்க முடியவில்லை. பணத்தை அங்கேயே வாங்குவதாயின் கடிதங்களையும் அங்கேயே கொடுக்கவேண்டும். அப்போது அவர்கள் தப்பித்துக்கொள்ள வழிஏற்பட்டுவிடும். அதனால்தான் ஹேமவதி சீமாட்டியிடமிருந்து பெறக்கூடிய இரண்டாயிரம் பவுன் இல்லாமல் போய்விடும். இருநூறு பவுனுக்கு ஆசைப்பட்டு இரண்டாயிரத்தை இழப்பதா? என்று யோசித்தான். பிறகு அவன் திடீரென்று ஏதோ முடிவு செய்து கொண்டவன்போல், 'சரி, வாருங்கள், இனியும் காலப்போக்கு செய்வதில் பிரயோஜனமில்லை. அவர்களும் கவனித்துக் கொண்டுதான் இருப்பார்கள். கிடக்கட்டும், நீங்கள் என்னுடன் வாருங்கள்' என்று கூறிக்கொண்டே குப்பன் கையில் ஒரு மெழுகுவர்த்தி விளக்கை எடுத்துக்கொண்டு மாடியின் படிக்கட்டுகளின் வழியே ஏறிச்சென்றான். அதைக்கண்ட கோபாலன், 'மாடிக்குச் சில மதுபானவகைகளை அனுப்பட்டுமா?' என்று கேட்க குப்பனும், 'அப்படியே செய், நல்ல தினுசாக அனுப்பு' என்று சொல்லிவிட்டு அவ்விருகனவான்களையும் மாடியிலுள்ள ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான், மோகனதாஸ் குப்பனுடைய இச்செயலில் சிறிது சந்தேகம் கொண்டான். ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கு அழைத்துச் செல்வதென்பது புதிய முறையாக இருக்கிறதே என்று நினைத்தான். அதே எண்ணம் மனோகரம் பிரபுவுக்கும் தோன்றியது. ஆகவே இருவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதில் அவர்கள் மிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமெனச் சொல்லிக் கொண்டதுபோலத் தோன்றியது, எனினும் மாடியின்கீழ் பலர் கும்பலாகக் கூடியிருப்பதால் எதற்கும் பயப்படவேண்டியதில்லை என நினைத்து அவனுடன் தைரியமாகச் சென்றார்கள்.

அவர்கள் போகவேண்டிய அறைக்குப் போனதும் அதில் கொலை செய்வதற்கோ, மற்றதற்கோ வசதியான ஒன்றும் இல்லாமல் இருந்ததால் மனோகாரும், மோகன தாஸும் சிறிதும் அச்சமோ சந்தேகமோ இல்லாமல் அவ்வறையில் நுழைந்தார்கள். எனினும் எச்சரிக்கையுடனேயே இருக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் குப்பன் பின்னால் சிறிது தூரத்திலேயே இருந்தார்கள். குப்பனும் அவ்வறையில் சென்றதும், 'இதோ இந்த அறைதான் என்னுடையது' என்று சொல்லிக்கொண்டு அவ்வறையின் கதவை நன்ருகத் திறந்தான். அறையில் மேஜையின்மீது ஒரு விளக்கு இருந்ததாலும், குப்பன்கையில் ஒரு விளக்கு வைத்துக்கொண்டிருந்ததாலும் வெளிச்சம் அதிகமாகத் தெரிந்ததால் அறையை நன்ருகக் கவனித்துப் பார்த்தார்கள். குப்பனும், 'இந்த அறையில் தான் இனிநான் என்னுடைய விஷயங்களை யெல்லாம் கவனிப்பேன். இந்த அறையில் உட்காருங்கள். நான் அக்கடிதங்களைக் காண்பிக்கிறேன்' என்ருன். சந்தேகிப்பதற்கு ஒன்றுமில்லாமல் இருந்ததால் அவர்கள் தாராளமாக உள்ளே சென்று வேலையைக் கவனிப்பதென்று நினைத்தார்களென்ருலும் ஏதேனும் திடீரென்று சூழ்ச்சி செய்யப்பட்டாலும் அதனால் ஏற்படும் கஷ்டத்தைத்தானே ஏற்றுக்கொண்டு பலவிதத்திலும் தனக்கு உதவி செய்தவரான மனோகரம் பிரபுவுக்கு எத்தகைய ஆபத்துமில்லாதபடி செய்ய வேண்டுமென்னும் எண்ணத்துடன் மோகனதாஸ் முதலில் சென்ருன். குப்பன் அவ்வறையில் ஒரு பக்கத்திலிருந்து மற்றொருபக்கம் சென்று எதிர் சுவற்றின் ஓரமாக இருந்த மேஜையின் அருகில் நின்ருன். மோகனதாஸ் அறையின் கதவின் ஓரமே நின்றிருந்தான். மனோகரரோ வாயிற்படியிலேயே இருந்தார். அச்சமயத்தில் திடீரென்று ராட்சஸகுப்பன் நிற்குமிடத்தில் கீழிருந்த பூமி அதாவது தரை சரசரவென்று விலகியது. குப்பன் ஒ

வென்று பயங்கரதொனியில் கூச்சல் போட்டான். மறுநிமிஷமே அவன் ஆளைக்காணேம் குப்பன் கையிலிருந்து விளக்கும் தடியும் கீழே விழுந்தது. பாதாளத்தில் போய்ச் சேர்ந்தான் சூழ்ச்சிசெய்த குப்பன்.

அந்தக் கோரக்காட்சியை எதிர்பாராத வகையில் கண்ட மோகனதாஸும் மனேகரும் திக்பிரமையுடனும் பயத்துடனும் நின்றனர். வாயெடுத்துப் பேச அவர்களால் முடியவில்லை. குப்பன் நின்றிருந்த விடத்தில் பூமி விலகியதையும், அங்கே வாயில் தோன்றி இருட்டான பள்ளம் காணப்படுவதையும் கண்டு திகில் அடைந்தார்கள். பிறகு சொற்பநேரங் கழிந்த பின்னர் அவர்கள் புத்தி சுவாதீனமடைந்து இனி அங்கு இருக்கக்கூடாதென நினைத்து வெளியேபோகக் கருதி வாயிற்படியின் கதவைத் திறந்து பார்த்ததில் திறக்க முடியவில்லை; ஏன்? கோபாலன் அங்கு வந்து போனபோது அறையின் கதவை வெளிப்பக்கம் சாத்திக்கொண்டு போய் விட்டான். அறையில் போடப்படும் சத்தம் அல்லது கூச்சல் வெளியிலுள்ளார்க்குத் தெரியக்கூடா தென்பதே அவனது எண்ணம். கதவைத் திறக்க முடியாமற்போகவே அவர்கள் அதிக அச்சமடைந்து என்ன செய்வதென்று தோன்ருமல் திகைத்து நின்றசமயம் திடீரென்று அந்தக் கதவைத்திறந்து கொண்டு ஒருமாது உள்ளே நுழைந்தாள். அம்மாதைக் கண்டதும் அவள்தான் தன்னுல் ஒரு சமயம் காப்பாற்றப்பட்டவள் என்பதை உணர்ந்த மோகனதாஸ், ஆச்சர்யத்துடன் 'ஆ' என்ருன். இதற்குள் அவள் தன் உதட்டின்மீது விரலை வைத்துக்கொண்டு, 'சத்தம் செய்யாதீர்கள். இனி நீங்கள் எதற்கும் பயப்படவேண்டியதில்லை' என்று சொல்லிக்கொண்டே அறையின் கதவை உள் பக்கமாகச் சாத்திக் கொண்டாள்.

மனோகாரும், மோகனதாஸும் அம்மாது மாரகதமே யென்றும் அவள் நல்லெண்ணத்துடனேயே அங்கு வந்திருக்கிறாள் என்பதையும் தெரிந்துகொண்டு ஒருவாறு மன நிம்மதி யடைந்தனர். அப்போது மாரகதம், 'நீங்கள் பீதியடைய வேண்டாம். அதோ அந்தப்பள்ளம் உங்கள் இருவருக்காகவே ஏற்படுத்தப்பட்டது. ஆனால் நான் உங்களைக் காப்பாற்றினேன்' என்று கூறினாள். அதற்கு மனோகார், 'நற்குணமுடையமாதே; எங்கள் உயிரையே நீ காப்பாற்றி எங்களுக்கு உயிர்ப் பிச்சை அளித்தாய். இப்போது நாங்கள் விஷயத்தை உணர்ந்து கொண்டோம். அந்த அயோக்கியன் எங்களைக் கொல்லவே இந்த இடத்துக்கு அழைத்து வந்திருக்கிறான். நீ எங்களைக் காப்பாற்றி இருக்கிறாய். நீ அதற்கேற்ற பெருத்த சன்மானத்தை யடைவாய் என்பது நிச்சயம்' என்று பரபரப்புடன் பேசலானார். மாரகதம் குறுக்கிட்டு, 'இப்படி உரத்த குரலில் பேசவேண்டாம். இங்கே நடக்கும் சங்கதி மாடியின்கீழுள்ள யாவருக்குமே தெரியலாகாது,' என்றாள். அதற்கு அவர், 'அது முடியவே முடியாது. இப்படிப்பட்ட அக்கிரமம் இங்கு நடப்பதை மூடிவைக்கக் கூடாது. குப்பன் செய்த சூழ்ச்சி கீழே இருக்கும் அனைவருக்கும் தெரியவேண்டியதே. அவர்களே நியாயம் கூறட்டும்' என்றார். அதற்கு மாரகதம், 'செல்வநாதரே! மேற்கொண்டு பேசவேண்டாமென உங்களுக்கு நான் கட்டளை இடுகிறேன். நீங்களே இப்போது எனக்கு நீங்கள் அதிகம் கடமைப்பட்டிருப்பதாகக் கூறினீர். அது உண்மையாயின் நீங்கள் என் சொற்படி கேட்க வேண்டும். இவ்விஷயம் இரகசியமாக இருக்கவேண்டு மென்பது என் அபிப்பிராயம். நான் உங்கள் இருவரையும் காப்பாற்றி இருப்பதால் நீங்கள் என் உயிரைக் காப்பாற்றுவதாயின் இன்று இரவு நடந்த இவ்விஷயத்தை எங்கும் வெளியில் நீங்கள் சொல்லக்கூடாது. இந்த சங்கதி வெளியே தெரிந்தால்

கோபாலன் தம்பதிகளுக்கு ஆபத்துவரும். எனக்கும் ஆபத்தே. ராட்சஸ குப்பன் கொள்ளைக்காரனாகவும், கொலைக்காரனாகவும் இருப்பது வாஸ்தவமே என்றாலும் அவனைக் கொல்ல தனக்கு என்ன உரிமை இருக்கிறது? அவன் உங்கள் இருவரையும் கொல்ல நினைத்தான். நான் அதைத் தடுத்து அவனே சாகும்படி செய்துவிட்டேன். ஆதலால் எனக்குத் தண்டனை கிடைக்கும். மேலும் குப்பனுடைய சினேகிதர்கள் என்னைப் பழிவாங்கவும் முயற்சிப்பார்கள். ஆதலால் இச் செய்தி எவருக்குமே தெரியக்கூடாது. இப்போதேனும் விஷயம் தெரிந்ததா?'' என்றாள்.

மோகனதாஸனும், மனோகரும் அம்மாது கூறிய விவரங்களைக் கேட்ட பின்னர் அவள் சொல்வது சரியேயென உணர்ந்து, தங்கள் உயிரைக் காப்பாற்றிய அவளது உயிருக்கு ஆபத்துவரலாகாதென்னும் எண்ணத்துடன் அவ்விஷயத்தை வெளிவிடாமல் மூடிவைக்கச் சம்மதித்தார்கள். ஆகவே, மனோகர் மரகதத்தைப் பார்த்து, 'அப்படியே ஆகட்டும். உன் இஷ்டப்படியே நடக்கிறோம். உனக்கு ஆபத்து வரும்படி நாம் எதையும் செய்யவே மாட்டோம். நீ பயப்படவேண்டாம். உனக்கு வேண்டிய உதவிகளையும் செய்வோம்,' என்றார். அப்போது அவள் 'மிக்க சந்தோஷம். நான் உங்கள் இருவரையும் நம்புகிறேன். ஆதலால் நான் உங்களிடம் உறுதி மொழியையும் வாங்கிக்கொள்ளவில்லை. நீங்களும் விரைவில் இங்கிருந்து போய்விடலாம். அதற்குள் அந்த அயோக்கியன் தக்க தண்டனையாகிய மரணத்தை அடைந்துவிட்டானா என்று கவனித்து விடுவோம்' என்றாள், இவ்வாறு கூறிக்கொண்டே அவள், அங்கு மேஜைமீது இருந்த மெழுகுவர்த்தி விளக்கை எடுத்து அங்கிருந்த பள்ளத்தில் நீட்டிப் பார்த்ததில் ஒரே இருட்டாகப் பெரும்பள்ளம் இருப்பதையும்

எத்தகைய சத்தமும் காணப்படாம லிருப்பதையும் கண்டு அவன் பாதாள உலகிற்குப்போய்விட்டான் என்று தெரிந்து கொண்டு அதை அவ்விரு கனவான்களிடமும் தெரிவித்தாள்.

ராட்சஸகுப்பன் ஒழிந்தான் என்பதை அறிந்து ஒருவாறு சந்தோஷமடைந்த மனோகரம்பிரபு மரகதத்தினிடம், 'மாதே நாங்கள் இந்தப் பயங்கரமான இடத்தினின்றும் விரைவில் வெளியே போய்விடவேண்டும். அதற்கிடையில் இரண்டொரு விஷயங்களைப் பேசிவிடுவோம். நான் உனக்குச் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். இரண்டாவதாக. நான் உனக்கு அளிக்கும் சன்மானத்தை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்,' என்றார். அவளும் அக்கேள்விகளைக் கேட்கும்படி கூறவே அவர், 'அக்கொடிய ராட்சஸன் யாருடைய தூண்டுதலின்மீது எங்களைக் கொல்ல முயற்சித்தான் என்பது உனக்குத் தெரியுமா?' என்றுகேட்க, அவள், 'அது எனக்குத் தெரியும். ஆனல் இவ்விஷயத்தில் உங்களைத் திருப்தி செய்யக் கூடிய வேளை இன்னும் வரவில்லை. இம்மாதம் 21 ந் தேதியன்று மீண்டும் சந்திக்கப் போகிறேனே. அது சம்பந்தமாகப் பல விஷயங்களைக் கவனிக்கவேண்டும். ஆதலால் இப்படிப் பட்ட கேள்விகளையெல்லாம் இப்போது கேட்டுக் காலத்தைப் போக்க வேண்டாம். நானும் போகிறேன், நீங்களும் போகலாம்' என்ருள். அப்போது மனோகார், 'அப்படியானல், இந்த முடிப்பை வைத்துக்கொள். 21-ந் தேதி யன்று நாங்கள் சந்திக்கும்போது இன்னும் அதிக தொகையைத் தருகிறேன்,' என்ருர். மரகதம் அதை வாங்கத் தயங்கியதால் அவர் பலவந்தப்படுத்தி அப் பணப்பையை அவளை எடுத்துக் கொள்ளும்படி வேண்டினர். ஆ! என்ன ஆச்சர்ய மாறுதல் பார்த்தீர்களா? மரகதம் சூதாட்டத்தில் கை தேர்ந்தவள்.

இரண்டொரு நாட்களுக்கு முன்தான் அவள் தன் கையி லிருந்ததையெல்லாம் சூதாட்டத்தில் தோற்றுவிட்டுப் பணம் கிடைக்குமா என்று காத்திருக்கிருள். அவள் வாழ்க்கை முழுவதிலுமே பலவித தவருன முறைகளாலேயே அவள் பணம் பறித்திருக்கிருள். அப்படியிருந்தும் அன்று அவள் ராட்சஸ குப்பனுடைய பொருளுதவியையும் அலட்சியம் செய்து அவனையே கொன்றதும், மனேகார் பணம் கொடுக்க முன் வந்தபோதும் அதைப்பெறப் பின் தங்கியதும் ஆச்சர்ய மான மாறுதலே யன்ருே? திடீரென்று மாகதத்துக்கு ஜீவ காருண்யமும், பூத தயையும் உண்டானது ஆச்சர்யமல்லவா? அவள் அவ்விரு கனவான்களையும் திருப்பித்திருப்பிப்பார்த்து அப் பணப்பையை எடுத்து நிறுத்திப் பார்த்து மறுபடியும் கீழே வைத்துவிட்டாள். அவளுடைய நடத்தையும் பார்வை யும் ஆச்சர்யமாக இருந்தன. கடைசியில் அவள் அப் பணப் பையை மனேகாரிடமே கொடுத்துவிட்டு, 'கனவான்களே! எனக்கு இச்சன்மானம்வேண்டாம். நீங்கள் உடனே இங்கிரு ந்து போய்விடுங்கள். இப்போது நடந்தவிஷயத்தை வெளியில் சொல்லாதீர்கள். ஜாக்கிரதை; போய்விடுங்கள்' என்று கதவின் பக்கம் கையைக் காண்பித்தாள். அப்போதும் மனேகார் பிடி வாதமாக, 'அது முடியவே முடியாது. எங்களுக்கு உயிர்ப் பிச்சையளித்த நீ இந்தச் சன்மானத்தைப் பெறத்தான் வேண்டும்' என்ருர். அதற்கு அவள், 'இதோ ஒருபவுன் எடுத் துக்கொண்டிருக்கிறேன். அதுவே எனக்குப்போதும். அதிக மாக எடுத்துக்கொள்ளும்படி ஏன் தூண்டுகிறீர்கள். பணம் கிடைத்தால் நான் என்னசெய்வேன் என்பது உங்களுக் குத் தெரியுமா? உடனே சூதாடுமிடத்துக்குச் செல்வேன். அங்கே போய்விட்டால் நமது மோகனதாஸுக்கு நான் செய்யவேண்டிய கடமையை மறக்கநேரிடும். ஆகையால் இப்போதே புறப்படுங்கள்,' என்ருள்.

மனோகரரும் மோகனதாஸனும் அந்த ஆச்சர்யத்தன்மை வாய்ந்தமாதின் செயலைக்கண்டு அவள் இஷ்டப்படிநடப்பதே சரியென நினைத்து அங்கிருந்து புறப்பட்டார்கள். படிக்கட்டுகளில் இருட்டாய் இருந்தும் அவர்கள் ஜாக்கிரதையாக இறங்கிக் கீழேபோனார்கள். இவர்கள் இருவரையும் கோபாலனும் அவனது மனைவியும் கண்டதும் ஆச்சர்யமும் திக்பிரமையும் அடைந்தனர். இவர்களுடன் பேசவில்லை. எனினும் அக்கனவான்களும் அவர்களுடன் எதையும் பேசவிரும்பாமல் பயங்கரமும் கொடுமையும் நிரம்பிய அக்கட்டடத்தை விட்டு வெளியே புறப்பட்டார்கள். அவர்கள் இருவரும் சென்றதும் கோபாலனும் அவன் மனையும் ஒருவரையொருவர் பீதியுடன் உற்றுப் பார்த்தனர். உடனே கணவன் மாடிமீது அவசரமாக ஏறிச்சென்றான். மனைவியோ அங்கிருந்த கூட்டத்தினருக்கு மதுபானத்தைப் பறிமாறிக் கொண்டிருந்தாள். மாடிமீது சென்ற கோபாலன் அத்தனியறையில் மாகதம்மட்டும் இருப்பதைக்கண்டு ஆச்சர்யத்துடன், 'யாது? மாகதமா' ராட்சஸகுப்பன் எங்கே,' என்று கேட்டான். அதற்கு அவள் அங்கே இருந்த பெரிய பள்ளத்தைக் காண்பித்து, 'அதோ அங்கே' என்றாள். அதைக்கேட்டதும் கோபாலன் திக்பிரமையுடன் அங்கேயா' என்று கேட்டுக்கொண்டு அம்மாதை விழித்துப்பார்த்தான். அப்போது அவள், 'குப்பன் தான் செய்த சூழ்ச்சியில் தானே அகப்பட்டுக்கொண்டான். அவன் மேஜையின் அருகில் நின்று கொண்டிருந்தபோது திடீரென அவன் பாதத்தடியில் இருந்தநிலம் விலகியதால் அவன் பாதாளத்தில் போய்ச்சேர்ந்துவிட்டான்' என்று கூறினாள். அவள் கூறிய காரணம் பொருத்தமாக இருந்தபடியால் கோபாலன் அது உண்மையாகவே இருக்குமென நினைத்து, 'ஆ, அப்படியா' என்று பீதியுடன் கூறினான். அதற்கு மாகதம் அப் பள்

ளத்தில் பார்த்துக் கொண்டே, 'குப்பன் இறந்துவிட்டான் என்பதில் சந்தேகமேயில்லை. பள்ளத்தில் தண்ணீரின் சலசலப்பு சத்தமோ அல்லது மனிதன் கூச்சலிடும் சத்தமோ கேட்பதில்லை. நிசப்தமாக இருக்கிறபடியால் அவன் இறந்தே போயிருக்கவேண்டும்? என்று கூறினள்.

அப்போது கோபாலன் மரகதத்தினிடம் ஒன்றும் பேச வில்லை யென்றாலும் அவளுக்கும் கேட்கும்படியாகத் தன் மட்டும், 'ஆ; இப்படி நடக்குமென்று நான் நினைக்கவேயில்லை நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது என்பது உண்மையாயிற்று. அவன் எவ்வளவுதான் கொடியவனுயினும் எங்களிடம் சகஜமாகவே நடந்துகொண்டான். நாங்களும் அவனும் பரஸ்பரம் ஒருவரை யொருவர் நன்கு அறிந்திருந்தோம். என்ன செய்வது? அவன் இறக்கவேண்டிய காலம் வந்துவிட்டது போலும்' என்று சொல்லிக்கொண்டான். இதைக்கேட்டுக் கொண்டிருந்த அவள் அவன் வேதாந்தமாகப் பேசுவது' கண்டு, 'ஆம், இனி நாம் என்ன செய்யப்போகிறோம். அவன் ஆயுள் அந்த வகையில் முடிந்துவிட்டதுபோலும். இனி யாருக்கும் இதனால் எதிர்பாராத ஆபத்து ஏற்படாமலிருக்கும் பொருட்டு இக்கிணற்றின் வாயைப் பெருங்கல்லினல் மூடிவிட்டு இந்த வாயிலையும் மூடிவிடவேண்டும்' என்றாள். அதற்குக் கோபாலன், 'அப்படியே செய். உன் இஷ்டப்படியே செய்வோம். அந்த இருகனவான்களையும் விட்டுவிட்டோமே, என்ன ஆகுமோ?" என்றான். அதற்கு அவள், 'அதற்காக நீ பயப்படவேண்டாம். நான் அவர்கள் நம்பும்படி தக்கதொரு கதையைக் கட்டிவிட்டேன். இங்கு நடந்த விஷயத்தை நீ யாரிடமும் சொல்லாதே. இந்த வீட்டில் கூட்டம்கூடும் ஜனங்களுக்கும் தெரிவிக்கவேண்டாம். ராட்சஸகுப்பன் எங்கே காணோமே என்று கேட்டால் தலை

மறைவாக வசிக்கும்பொருட்டு எங்கேயோ இரகசிய வாசம் செய்வதாகச்சொல்லிவிடு' பிறகு போகப்போகப் பார்ப்போம். என்றாள். வெளியே போய்விட்ட கனவான்கள் தன்மீதும், தன் கூட்டத்தார்மீதும் எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாதபடி தக்க கதையைக்கட்டி விட்டிருப்ப தால் கோபாலன் சிறிது நிம்மதியடைந்து அக்கிணற்றையும் அதன் வாயையும் தூர்த்துவிடச் சம்மதித்தான். அதற்கு மேல் இருவரும் மாடியினின்றும் கீழே இறங்கிவந்து அக்கிணறு இருக்கும் இடம்சென்று பெரிய கற்பாறைகளால் அதைமூட ஏற்பாடு செய்தனர். பிறகு ஒரு தச்சனைக் கொண்டுவந்து வீட்டைப் பழையபடி ரிபேர்செய்ய ஏற்பாடு செய்தனர். பிறகு மாகதம் அவ்வீட்டை விட்டுப் போய் விட்டாள். கோபாலனும் அங்கு நடந்ததை யெல்லாம் தன் மனைவியிடம் தெரிவித்தான்.

பாவம், ராட்சஸ குப்பனுடைய சரித்திரம் இவ்வாறாக முடிந்தது. மகாகொடியவனான அவனுக்குக் கொடிய, பரிதாப காமான மரணமே சம்பவித்தது. அதுமட்டுமா? தன் கையால் தன் மரணத்தைத் தேடிக்கொண்டான். பிறரைக்கொல்ல அவன் செய்த சூழ்ச்சியானது அவனையே கொன்றுவிட்டது எல்லாம் வல்லஇறைவன், மனேகார் மோகனதாஸ் போன்ற பரம சாதுக்கள் ராட்சஸ குப்பன் போன்ற அயோக்கிய னுடைய கையால் கொல்லப்பட இடங் கொடுப்பானு? கடவுள் மனிதரூபமாகத் தோன்றியே அதாவது மனிதர் மூலமே உதவி செய்வார் என்பதுபோல சமயத்தில் மாகதத்தை அங்கு இருக்கச்செய்து அவ்விருகனவான்களையும் காப்பாற்றி னர். குப்பன்போன்ற அயோக்கியர்களுக்கு இந்த கதியே நேரிடும்என்பதை அவனுடைய சரித்திரம் உபதேசிக்கின்றது. இத்தகைய சரித்திரங்கள் பலவற்றைப் படித்தாலும் நம் மக்

கள் அவற்றின் படிப்பினையை உணர்ந்து தம்வாழ்க்கையைத் திருத்திக் கொள்ளாமல் இருப்பது வருந்தத் தக்கதேயாகும்.

87-வது அத்தியாயம்

:(o):

மோகங் கொண்ட தியாகராஜன்

இப்போது நாம் கிருஷ்ணகிரியிலுள்ள ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம். சந்திரசேகரம் பிரபு தியாகராஜனுடைய குதிரை மீது ஏறிக் கீழேவிழுந்து காயம்பட்டு மூன்றுவாரங்கள் கழிந்திருந்தன. சந்திரசேகரனுடைய சித்தியும், சகோதரியும் அவ்விடத்தைவிட்டு இரத்தினபுரிக்குப் போய்விட்டார்களென்றும் சந்திரசேகரன் மட்டும் காயம்பட்டவன் என்னும் காரணத்துக்காக அங்கேயே படுத்திருந்தான். இம்மாளிகையில் இருந்தவர்களும் அவன் ஹேமவதி சீமாட்டியை விவாகம் செய்துகொள்ளப்போகிறான் என்று மறைவாகவும் இரகசியமாகவும் பேசிக்கொண்டார்கள். அதுபோலவே அவ்வீட்டு வேலைக்காரர்கள் தினகரம் பிரபுவுக்கும் ஷண்பகவல்லிக்கும் ஏற்பட்டிருந்த நிச்சயார்த்தம் முறிந்து போயிற்றென்றும். தினகரன் அவனுடைய கார்டியனோடு அன்னியதேசம்போய் விட்டானென்றும்கூடப் பேசிக்கொண்டார்கள். இதற்கிடையில் தியாகராஜனும், ராஜேஸ்வரியிடம் தனக்கு ஏற்பட்ட மோகம் இரட்டிப்பாகவே, அடிக்கடி ஹேமவதியின் மாளிகைக்கு வருவதும் ராஜேஸ்வரியுடன் உல்லாசமாகக் காலங் கழிப்பதுமாக இருந்தான். அவளும், தன்னிடம் அவனுக்கு ஏற்பட்ட மோகத்தை அதிகரிக்கச் செய்வதிலேயே கண்ணுங்

கருத்து முடையவளாய் அவனுடன் பேசும்போதெல்லாம் மிகச் சாமர்த்தியமாகப் பேசுவதுடன் பலவிதமான ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு தன்னை அழகுபடுத்தி அவனை மயக்கிவந்தாள். எனினும் ராஜேஸ்வரிக்கும் தியாக ராஜனுக்கும் நிச்சயார்த்தம் மட்டும் ஏற்படவில்லை. தியாக ராஜன் முதல் முறையாக ராஜேஸ்வரியைப் பாக்கியம் குடும் பத்தார் மாடியில் விருந்தில் சந்தித்தபோது அவர்கள் இருவ ருக்கும் பரஸ்பரம் அன்பு ஏற்பட்டபோதே ஒரு மாதகாலம் நிதானித்தே நிச்சயார்த்தம்நடத்துவதென்றுதீர்மானித்தான். அத்தீர்மானத்தின்படியே அவன், சிற்சிலசமயங்களில் ஆசை மேலீட்டால் உடனே விவாகம் செய்துகொண்டு விடலாமா என்று மனஎழுச்சி உண்டானபோதும் அதை அடக்கிக் கொண்டு தான் குறித்தகாலம் கடக்கவேண்டுமென எதிர் பார்த்திருந்தான். அக்காலமும் முடிந்தது.

இந்நிலையில் ராஜேஸ்வரி தான் மனமாரக் காதலித்தவ னும், தனக்கு இல்வாழ்க்கைச் சுகத்தை இரகசியமாக அளித் தவனும், தன் மாளிகையில் சேவகனாக இருந்தாலும் ஏதோ மர்மமான சரித்திரத்தை யுடையவனாக இருப்பவனுமான மோகன சுந்தரத்தைப்பற்றி அவள் நினைத்ததுண்டா? என்னும் கேள்வி பிறக்கலாம். அவள் அவனைப்பற்றிப் பல முறைகளில் நினைத்து மீண்டும் எப்போது அவனைக்கண்டு அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு இன்பமனுபவிக்கலாம் என்னும் எண்ணம் தோன்றியதுண்டு. மோகனசுந்தரத்தின் அழகிய உருவமே அவள் மனக்கண்முன் சதாதோன்றிக் கொண்டிருந்தது. தியாகராஜனைப் பெயரளவுக்கேனும் மணந்துகொண்டு விட்டால், அவனை ஏமாற்றித் தன் காத லனை வரவழைத்து வைத்துக்கொண்டு தன் இஷ்டப்படி இன்பமனுபவிக்கலாமென நினைத்துக் கலியாணநாளை ஆவலு

டன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தன் தாயை விரும்பாததாலும், அவளிடம் அவநம்பிக்கையும் வெறுப்பும் ஏற்பட்டிருந்ததாலும் அவளை விட்டுப்பிரிந்து ஒருநல்ல அந்தஸ்துடன் வசிக்கச் சௌகரியம் ஏற்பட்டுவிட்டால் பிறகு தன் இஷ்டப்படி நடக்கலாமென்னும் எண்ணத்துடன் தியாகராஜனை மணந்துகொள்ள விரும்பினளேயொழிய அவனிடம் அவளுக்குள்ள காதல் காரணமாகவோ அன்பு காரணமாகவோ அதற்குச் சம்மதிக்கவில்லை. ராஜேஸ்வரி மோகனசுந்தரத்தையாவது உண்மையுடன் காதலித்தாளா என்றால் அதுவும் சொல்ல முடியாது. தனக்கு அவனிடம் ஏற்பட்ட மோகத்தைத் தீர்த்துக்கொள்ள முனைந்தாளேயொழிய அது உண்மையான காதல் என்று நம்ப முடியவில்லை. மனோவிகாரத்தால் அவள் மனந்தடுமாறி மோகனசுந்தரத்தினிடம் தன் மானத்தை ஒருமுறை ஒப்படைத்துவிட்டதால் அதிலேயே மேலும் மேலும் ஈடுபட விரும்பினளேயொழிய அது மனப்பூர்வமான அன்பாகாது. உண்மையில் அவள் அவனிடம் காதல் கொண்டிருப்பதால் உலகம் என்ன சொல்லுமோ என்பதைக் கவனியாமல் அவன் வேலைக்காரனாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமலும், மனிதர்களால் நிர்மாணிக்கப்பட்ட சமூக அமைப்பை மீறியும் அவனை மணந்துகொள்ள முன் வந்திருப்பாள். அவள் விவாகம் செய்துகொள்ளத் துணியாததால் அதை வெறும் மோகமென்றே கூறவேண்டும்.

ஒரு ஆணோ, அல்லது பெண்ணோ, ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ காதலிப்பது உண்மையாயின் பகிரங்கமாக விவாகம் என்னும் ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு அவளை அல்லது அவனை ஆயுள் முழுதும் விட்டுப் பிரியாமல் இன்ப துன்பங்களைச் சமமாய் ஏற்றுக் காப்பாற்றும் அல்

லது ஆதரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஆண்மையோ யோக்கியதையோ இல்லாமல் இரகசியமாகத் தங்கள் மிருக இச்சையைத் தீர்த்துக் கொள்வார்களாயின் அதை உண்மை யான காதல் என்று சொல்ல கண்டிதமாய் முடியாது. அது உடனே ஏற்பட்ட வெறும் மோகமேயாகும். அதற்கு இணங்கிக் காரியத்தில் இறங்கி விடுவது மன்னிக்க முடியாத தவறுதலாகும்.

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் கூறியபடி தியாக ராஜன் ராஜேஸ்வரியை மணந்துகொள்ள நிச்சயித்துவிட்ட படியால் அதை அவளிடம் தெரிவித்துவிட வேண்டுமென்று நினைத்தான். அதற்குத் தக்கபடி ஒரு சந்தர்ப்பத்தைக் காண் பது மிக எளிதாக இருந்தது. ஏனெனின் தியாகராஜனும் ராஜேஸ்வரியும் கலந்துபேச ஆரம்பித்தால் அதில் ஹேமவதி தலையிடவே மாட்டாள். அவர்கள் இருவரும் எவ்வளவு தாராளமாக வேண்டுமாயினும் பேசலாம். ஆகவே ஒருநாள் காலை தியாகராஜன் சுந்தரவிலாச மாளிகைக்கு வந்தபோது சுமார் பதினொருமணி இருக்கும். ராஜேஸ்வரியோ அப்போது குளித்துவிட்டுப் புதியஉடைகளை அணிந்துகொண்டிருந்தாள். கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்னும் முடிவான எண்ணத்துடன் அவன் அங்கு வந்ததால் அவனது கண் ணுக்கு அவள் ரம்பையைப்போலக் காணப்பட்டாள். தியாக ராஜன் தன்னிடம் அதிக ஆர்வம் கொண்டு அங்கு வந்திருக் கிறான் என்பதை அவனுடைய பாவனையினால் தெரிந்து கொண்ட ராஜேஸ்வரி, அவனைப் பூர்த்தியாக மயக்க வேண்டு மென்னும் எண்ணத்துடன் அவள் அவனை அணுகினாள். அவளுக்கும் ஆசையும் ஆவலும் ஏற்பட்டுவிட்டதால் அவளது உதட்டில் ஈரம் காணப்பட்டது. அவளது ஸ்தனங்கள் விம்ம லாயின. இன்னும் மற்ற அறிகுறிகள் பல தோன்றவே தியாக

ராஜன் அவளது மோகாந்தகாரத்தில் மூழ்கினன் என்றே கூற வேண்டும். ஆகவே அவன் அவளுடன் தனியாக அம்மாளி கையின் தோட்டத்தில் உலாவச்சென்று அங்கு ஒரு மாத் தடியில் நின்றதும், அவள்முன் மண்டியிட்டு வணங்கி, 'பெண்ணே, நான் உன்னிடம் ஒரு கோரிக்கையை விண்ணப் பித்துக் கொள்கிறேன். அதை நீ மறுக்கவே கூடாது' என்ருன். உடனே அவள், 'உன்னுடைய வேண்டுகோள் எதுவாயினும் அதை நிறைவேற்றத் தானே நான் காத்திருக் கிறேன். உன் அபிப்பிராயத்தை உடனே சொல்' என்று பரி வுடன் கேட்க, அவள் தன் இஷ்டப்படி நடப்பாள் என்னும் நம்பிக்கையுடன், 'கண்ணே நீ என்னை விவாகம் செய்து கொண்டு எனக்குச் சொந்தமாய் விடுவாயா?' என்று கேட் டான்.

அதற்கு அவள் சிறிதும் தாமதியாமல், 'அப்படியே செய்வேன். அதில் ஒன்றும் தடையில்லை. நான் உன்னுடை யதே' என்ருள். அதைக் கேட்டதும் அளவுகடந்த ஆனந்தங் கொண்ட தியாகராஜன் அவளது கழுத்தில் அவனது கரத் தைப் போட்டு அணைத்துக் கொண்டு அவளுடைய கன்னத் தில் முத்தமிட்டான். பிறகு அவன், 'நீ என்னுடைய சொந்த சொத்து தானே. என் வாழ்க்கையிலேயே இத்தகைய இன்பம் இதுவரை ஏற்பட்டதுமில்லை. இனி ஏற்படப் போவதுமில்லை. இப்போது உன்னுடைய பதிலால் நீ எனக்கு அளித்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை. நானே இதுவரை எவரை யுங் கண்டு நேசித்ததேயில்லை. ஆகவே நான் பரிசுத்த அன்பு டன் உன்னை நேசிக்கிறேன். உன் இன்ப வாழ்க்கைக்கு அவ சியமான எல்லாவற்றையும் நான். செய்து கொடுக்கக் காத் திருக்கிறேன். நாம் குழந்தைகள் அல்ல; பொறுப்பை உணர்ந் தே எந்தக் காரியத்தையும் செய்கிருேம். ஆதலால் நான் இப்

போது கூறும் உறுதிமொழியை நிறைவேற்றுவேன் என்பது திண்ணம். உன்னைப் பெற்றதால் நான் பரமானந்த மடைந் திருப்பதுடன் இனியும் இன்பகரமான வாழ்க்கையை நடத்து வேன் என்னும் நிச்சயமே எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அன் புள்ள ராஜேஸ்வரி ! அவ்வாறே என்னை நீ மணந்து கொள்வ தால் உனக்குச் சந்தோஷ வாழ்க்கையும் இன்பமும் ஏற்படு மென நீ உண்மையில் நம்புகிறுயா ?' என்று கேட்டான்.

தியாகராஜன் அவ்வளவு உண்மையாகவும், அன்புடனும் பேசும்போது தான் செய்வதெல்லாம் மோசம் தானே என் றும், மோகன சுந்தரத்தினிடம் மோகத்தை வைத்துக் கொண்டு அவனுடைய இன்பத்தைப் பெறத் தியாகராஜனை ஒரு கருவியாக உபயோகித்துக்கொள்ள நினைப்பது நியாயமா என்றும் யோசித்த ராஜேஸ்வரி சிறிதுநேரம் மௌனமாக நின்றிருந்தாள். ஆனல் உடனே அந்த நல்லெண்ணம் மறைந்துபோய் சுயநல மென்னும் தீயகுணம் அதிகமாகப் பிரகாசிக்க ஆரம்பித்தது. ஆகவே மீண்டும் அவனை ஏமாற்று வதென்னும் எண்ணத்துடன், 'என தன்புள்ள தியாகராஜா ! நான் உன்னை அன்று சந்தித்தது முதல் உன்னிடம் அளவு கடந்த காதல் கொண்டுள்ளேன். அது மட்டுமல்ல. அதற்கு முன்னரும் நான் கிருஷ்ணகிரியில் உன்னைப் பார்த்த போதெல் லாம் சிறிது உற்றுக் கவனிப்பதுண்டு' என்றுள். இதனல் அதிக சந்தோஷமடைந்த அவன், 'ஆ, இதுவும் உண்மை தானு? முகஸ்துதியாக ஒன்றும் சொல்ல வேண்டாம். நீ உண்மையில் என்னை நேசிப்பதாயின் அதற்காக நான் பெருமை யடைவேன்!' என்று கூறியதற்கு அவள், 'ஆம்; உண்மையே' என்று அப்போது தான் முதன் முதலாக ஒருத்தி தான் மனமாரக் காதலிக்கும் ஒருவனிடம் தன் காத லைப் பற்றிச் சொல்லிக் கொள்வதுபோன்ற பாவனையுடன்

அன்பு கனிந்த சொற்களோடு பேசினுள். பாவம்! தியாக ராஜன் இதுவரை பெண்களேயே அலட்சியமாக நினைத்துவந்த வன் ராஜேஸ்வரி செய்த சூழ்ச்சிகளால் அவளிடம் உண்மை யிலேயே காதல்கொண்டு அவளே விவாகம் செய்து கொள்ள வும் நிச்சயித்து அதற்கான அவளது சம்மதத்தைப் பெறக் காத்திருப்பதால் அவள் கூறியதெல்லாம் உண்மையே என்று கருதி மிகவும் சந்தோஷப்பட்டான். அவர்கள் இருவரும் சற்று நேரம்வரை அத்தோட்டத்திலேயே தனியாக உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்போது கழித்த அந்த இரண்டு மூன்றுமணி நேரத்தையும் தன் வாழ்க்கையிலேயே இன்ப மானதொரு காலமெனத் தியாகராஜன் கருதினுன். ராஜேஸ் வரியும் அவ்வேளேக்குள் அவனது அன்பையும் நம்பிக்கையை யும் பூரணமாகப் பெறுவதற்குரிய ஏற்பாடுகளே யெல்லாம் செய்துகொண்டாள். அவனுடன் அவள் காதல் பேச்சுகளேப் பேசியபோது தன் எதிரில் நிற்பவன் தன் மனதைக் கவர்ந் துள்ள மோகனசுந்தரமே என்று நினேத்தே பேசினுள். தியாக ராஜன் தன் கரத்தை அவள் கழுத்தில்போட்டு அணேத்துக் கொண்டபோதும் மோகனசுந்தரத்தை அணேத்துக் கொண்ட தாகவே அவள் கருதியதால் அவள் தேகமும் புளகாங்கித மடைந்து மயிர்க் கூச்சமெடுத்தது. அதைக் கண்ணுரக்கண்ட தியாகராஜன் அவள் உண்மையிலேயே தன்னிடம் அவ்வளவு அன்புடன் இருக்கிறுள் என நினேத்துச் சந்தோஷமடைந் தான்.

இச்சமயத்தில் சாப்பாட்டுக்கு வரும்படி அழைக்கப் பட்டதால் இருவரும் தோட்டத்தை விட்டு மாளிகையில் புகுந்தனர். சாப்பாடு முடிந்தபின்னர் தியாகராஜன், ஹேம வதி சீமாட்டியைத் தனியாகக் கண்டுபேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். சீமாட்டியும் அதற்குச் சம்மதிக்கவே,

ஹேமவதியும் அவனும் புஸ்தகசாலே யமைந்த தனியறைக்குச் சென்ருர்கள். தியாகராஜன் தன்னுடைய அபிப்பிராயத்தை அதாவது தான் ராஜேஸ்வரியை விவாகம்செய்து கொள்வதென நிச்சயித்திருப்பதை அச்சீமாட்டியிடம் தெரிவித்தான். அவளும் தான் தனது மூத்தகுமாரியை மிக்க அன்புடன் வளர்த்து அவளுடைய நன்மையையே கோரி வருவதாகவும், அவளுக்குத் தியாகராஜனைப்போன்ற ஒரு செல்வனும் யோக்கியனும் கணவனுகக் கிடைப்பதில் தனக்கு மிகச் சந்தோஷமேயென்றும், ஆதலால் இந்த விவாகத்துக்குத் தன் மனப்பூர்வமான சம்மதத்தைத் திருப்தியுடன் தருவதாகவும் கூறினுள். ஹேமவதியும் ராஜேஸ்வரியின் யோக்கியதையையும், அவளது உண்மையான நோக்கத்தையும் நன்கு அறிந்திருந்தும் அவள் மேற்கூறியவாறு பேசியதானது வெறும் ஹம்பக்காக இருந்தும் தியாகராஜன் அது உண்மையே யென்று கருதித்தான் கேட்டதைச் சீமாட்டி உடனே ஒம்புக்கொண்டதற்காக மிகச் சந்தோஷமடைந்தான். சீமாட்டி தன்னுடைய அன்புள்ள புத்திரியைப் பிரியச் சம்மதித்ததற்காக அவளுக்கு நன்றிபாராட்டும் உத்தேசத்துடன் அவளது கரத்தைப் பிடித்துக் குலுக்கினன். அப்போது அச்சீமாட்டி, அவனிடம், 'தியாகராஜா! இப்போது நீயும் என்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுய் விட்டதால் இச்சமயத்தில் உன்னிடம் என்னைப் பற்றிய ஒரு சங்கதியைத் தெரிவித்துவிட விரும்புகிறேன். சந்திரசேகரம்பிரபு என்வீட்டிலேயே இருக்கிருன் என்பதும், அவனிடத்தில் நான் அன்புடன் நடந்து கொள்கிறேன் என்பதும் உனக்குத் தெரிந்த விஷயமே. இவன், நான் அவனை மணந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் சொண்டான். எனக்கும் அவனுக்கும் வயது வித்தியாசம் அதிகம் இருப்பதால் உலகம் அவனைக்கண்டு சிரிக்குமென்றும், ஆதலால் சரியாக யோசனைசெய்து சொல்லும்படியும் கேட்டேன்.

அப்போதும் அவன் ஒரே உறுதியாக நான் அவனைக் கலியா ணம் செய்துகொள்ள வேண்டுமென்றும், இல்லாவிட்டால் தன் உயிரை மாய்த்துக்கொண்டு விடுவதாகவும் கூறினான். ஆதலால் நானும் அவனிஷ்டப்படியே செய்வதென்றும், விரைவில் அவனை விவாகம்செய்து கொள்வதென்றும் நிச்ச யித்திருக்கிறேன்,' என்றாள்.

அதைக்கேட்ட அவன், 'ஓ, அப்படியா? மிகச் சந்தோ ஷம், எனக்குத் தெரிந்தவரையில் சந்திரசேகரம்பிரபு மிக்க நல்லவன் என்றும், உனக்குத் தகுதியானவனென்றுமே நினைக்கிறேன். அவனைக் கலியாணம்செய்து கொள்வதென்று தீர்மானித்திருப்பதற்காக உன்னைப் பாராட்டுகிறேன்' என்று கூறினான், பிறகு அவன் சீமாட்டியிடம் அனுமதி பெற்றுத் தன் இல்லம் போகப் புறப்பட்டவன் தனக்கு மனைவியாக வாய்க்கப்போகிற ராஜேஸ்வரியிடமும் சொல்லிவிட்டுப் போக வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவள் இருக்குமிடம் சென்றான். அவளிடமும் தான் வீட்டுக்குப்போய் மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுச் சந்திரசேகரம் எங்கு இருப்ப தாக விசாரித்தான். அவன் மாடிமீது அறையில் இருப்பதாக அவள் சொன்னதும், 'சரி, நான்போய் அவனை அங்கே பார்க் கிறேன். நானும் அவனும் விரைவில் உங்கள் குடும்பத்தில் கலந்துவிடுவதால் நாங்கள் இருவரும் பரஸ்பரம் சிநேகிதர்க ளாக இருக்க வேண்டுமல்லவா? எனக்கும் உனக்குமிடையில் நிகழ்ந்ததையும் நான் அவனிடம் சொல்லி விடுகிறேன். இப் போது நான் அவசரமாகப் போகவேண்டி யிருக்கிறது. ஒரு முத்தம்கொடு' என்றான். பரஸ்பரம் இருவரும் ஒருவரை யொருவர் முத்தமிட்டுக் கொண்டதும் தியாகராஜன் அவ் வறையை விட்டு சந்திரசேகரம் இருக்கும் அறைக்குச் சென் றான். அங்கு தியாகராஜனிடம், தான் ராஜேஸ்வரியை விவா

கம் செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதையும் அதற்கு ஹேமவதி சீமாட்டியும் ஒப்புக் கொண்டிருப்பதையும் தெரிவித்ததுடன், சந்திரசேகரம்பிரபு ஹேமவதி சீமாட்டியை மனைவியாகப் பெறப்போவதைத் தான் அறிந்து கொண்டதாகவும், அதற்காக அவனைப் பாராட்டுவதாகவும் கூறினான். பிறகு அவர்கள் ஏதேதோ பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபின் சற்று நேரத்துக்குப் பின்னர் தான் அவசரமாகப் போகவேண்டுமென்று கூறிவிட்டுத் தியாகராஜன் புறப்பட்டான். தெருவில் அவனுடைய முதல்தரமான குதிரை தயாராக இருந்தது. அவன் அக்குதிரையின்மீது ஏறிக்கொண்டு கிருஷ்ணகிரிக்கடுத்த மிதுனபுரிக்குச் சென்றான். குதிரை வெகுவேகமாகஓடியது. மிதுனபுரியின் அருகில் சென்றதும் அங்கே கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்த சில குதிரைகள் கனைத்ததால் தியாகராஜனுடைய குதிரையும் மிரண்டு குதிக்கலாயிற்று. எதிர் பாராமல் அவ்வாறு நேர்ந்ததால் தியாகராஜன் கீழேவிழுந்தான். அருகிலிருந்த பாறை மீது அவன் தலைமோதியதால் பிரக்ஞையடைந்தான். பிறகு சொற்பநேரம் கழித்துத் தெளிந்து எழுந்தபோது மிக்க அழகான ஒரு இளைஞன் தனக்கு உபசாரம் செய்வதைக் கண்டான்.

தியாகராஜனுடைய எதிரில் நின்றிருந்த அந்த வாலிபன் அவனைப்பார்த்து, 'பலமான காயம் பட்டுவிட்டதோ. வேதனை அதிகமாக இருக்கிறதா' என்று மிக்க அனுதாபத்துடனும் சிரத்தையுடனும் கேட்டான். அப்போது தியாகராஜன் எழுந்து உட்கார முயற்சி செய்துகொண்டே, 'இல்லை, அவ்வளவு அதிகமாக அடிபடவில்லை. எலும்புகளொன்றும் முறிந்து போகாமல் போனதற்காகக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். தலையில் மட்டும் சிறிது வலிகாணப்படுகிறது' 'நெற்றியில்

ஏதேனும் அதிக காயம்பட்டிருக்கிறதோ என்பதைப் பார்த்துச்சொல்' என்று கேட்டான். அதற்கு அந்த வாலிபன், 'காயம் அதிகமாக இல்லை. ஆனால் அந்தப் பக்கத்தில் கொஞ்சம் வீங்கியிருப்பதாகத் தெரிகிறது' என்றான். அதற்குத் தியாகராஜன், 'நல்லது ஆயிற்று. எனக்கு நேர்ந்த இச்சம்பவம் யாருக்கும் தெரியவேண்டாம். என் குதிரை எங்கே?' என்று வினவ. அவன், 'அக்குதிரை அதிகதூரம் ஓடிப்போய் ஒரு ரவுண்டு அடித்துக்கொண்டு மறுபடியும் அதோ வந்து மேய்கிறது. நான்போய் அதைப் பிடித்திருப்பேன். ஆனால் உனக்கு ஸ்மரணை வரும்வரை உன்னை விட்டுச்செல்ல என் மனம் துணியவில்லை' என்றான். அப்போது தியாகராஜன், 'நான் குதிரை எங்கேஎன்று கேட்பதைவிட முதலில் உனக்கு நன்றி செலுத்தி யிருத்தல் வேண்டும். எனக்கு இந்த உதவி செய்த உனக்கு மனமார நன்றி செலுத்துகிறேன். இம்மாதிரி சமயத்தில் தனியாக இருத்தல் மிக அபாயகரமானதே நான் தனியாக இராதபடி நீ இங்கு வந்ததைக்கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அந்த இளைஞனை உற்றுக் கவனித்தான். அவன் உபாயமான ஆடைகளையே அணிந்திருந்தானென்றாலும் அவை சுத்தமாக இருந்ததாலும், அவனும் அழகாயும் ஒழுங்கானவனாயும் இருந்ததாலும் அவன் பெரிய இடத்தைச் சேர்ந்தவன் என்று தோன்றியது.

186582

தியாகராஜன் வந்தனம் கூறியதைக்கேட்ட அந்த இளைஞன், 'நீ அன்புடன் நடந்து கொண்டதற்காக வந்தனம். நான் இந்த இடத்துக்குப் புதியவன். நான் அதிக காலமும் இங்கே இருக்கமாட்டேன்,' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தபோது தியாகராஜன், 'சிறிது பொறு' என்று சொல்லிவிட்டுத் தன் குதிரை மேய்ந்துகொண்டிருந்த இடத்துக்குச்

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று அப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம்பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுன்ஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாஸாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபா தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 8-பாகமும் ...	16	2	தினகரசுந்தரி	1	0
			தபால்கோள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	18
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	10
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
கனகபூஷணம் 2 பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	12
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்